# அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம்

# American Tamil Academy

## நிலை 2 புத்தக கையேடு
## Guide for Level 2

http://www.amtaac.org
support@Amtaac.Org

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமை திறம் வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

- மனோண்மணீயம் பெ.சுந்தரனார்

பொருள்:

*நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாக திகழ்கிற இந்தியக் கண்டத்தில், தென்னாடும் அதில்சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறைபோன்ற நெற்றியாகவும் அதிலிட்ட மணம்வீசும் திலகமாகவும் இருக்கின்றன.*

*அந்த திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல அனைத்துலகமும் இன்பம்பெறும்வகையில் எல்லாத்திசையிலும் புகழ் மணக்கும்படி இருக்கின்ற பெருமை மிக்க தமிழ்ப்பெண்ணே! தமிழ்ப்பெண்ணே!*

*இன்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பானத் திறமையை வியந்து எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!*

# பொருளடக்கம்


பாடம் 1. அதகவின் நிலைகள் ATA Course levels, Syllabus etc. .................................... 4

பாடம் 2. நிலை 2 – மற்ற நிலைகளுடன் ஒப்பீடு .................................................. 5

பாடம் 3. நிலை 2 பாடத்திட்டம் ........................................................................ 8

பாடம் 4. பாடப் புத்தக விளக்கங்கள் ................................................................ 13

பாடம் 5. பயிற்சிப் புத்தக விளக்கங்கள் ............................................................ 14

பாடம் 6. உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள் – சொல் பயிற்சி மட்டும் ..... 14

பாடம் 7. தேர்வு மாதிரி வினாத்தாட்கள் ........................................................ 15

பாடம் 8. ஆசிரியர் கையேடு ............................................................................ 21

# பாடம் 1. அதகவின் நிலைகள் ATA Course levels, Syllabus etc.

| Course Level | Recommended Age | Skills | Pre-requisites | Reading | Writing | Oral/Conversation |
|---|---|---|---|---|---|---|
| Nilai 2 | Age 6 and above<br><br>First Grade and above<br><br>(Note: Even a 10 or 15 year old need to start this level) | All the Tamil alphabets – first part. Starting with simple alphabets like ப, ம, ய with reading/writing.<br><br>Two letter and three letter Words and simple phrases Differentiate long/short sounds<br><br>Vocabulary of 250 new words | No pre-requisite and can take this level with or without completing Mazhalai or Nilai 1<br><br>Structured for all kids, including for parents who do not speak Tamil | Reading Tamil Alphabets with lot of examples – first part.<br><br>Simple sentences/Phrase reading | Letters Words Sentences<br><br>Ability to spell words based on pronunciation | Ability to narrate short stories, answer simple questions.<br><br>Thirukkural/Aathichoodi<br><br>Common terms used at home, Narrate incidents and stories, talk about an animal/bird/festival |

- All ATA levels will consist of 25 Lessons of each 2 Hrs duration including reading, writing, songs, story, oral, group play, Thirukkual/Aathichoodi etc.
- Except Mazhalai/Intro level, all the levels from ATA levels from Level 1 will have an Exercise Book with 25 exercises for 25 lessons, with requisite of 3 hrs of learning at Home.
- 3 evaluations per year for 3 semesters for ALL levels
- No repetition of songs/stories between levels
- Student starting at Mazhalai should have progressive, continuous learning from Mazhalai, Nilai1, Nilai 2 and Nilai 3.

- Also the students of older age, can start either Mazhalai OR Nilai 1 or Nilai 2
- Without Nilai 2 completed, students cannot take Nilai 3
- From Nilai 4 upto Niali 10, there will be prerequisites of previous levels completed, irrespective of their Age. The pre- requisites can be cleared by the way of simple tests of previous levels.
- Nilai 2, 3, 4, 5 & 6 – should enable the students to basically read/write/speak simple Tamil. This will be the minimum to successfully learn the language.
- Nilai 6 to 10, should be structured for the students who will continue to learn up to Grade 10 or 12, to earn Language Credits

## பாடம் 2. நிலை 2 - மற்ற நிலைகளுடன் ஒப்பீடு

# மழலை நிலை

- **தமிழ் மொழி அறிமுகம்**: உயிரெழுத்துக்கள் மற்றும் ஆயுத எழுத்து
- **கணிதம்** - எண்கள்: ஒன்று முதல் பத்து வரை , வடிவங்கள்
- **பொது அறிவு**: காய்கள், பழங்கள், விலங்குகள், கடல் வாழ் உயிரினங்கள், நிறங்கள்
- **அறிவியல்**: சுவைகள், திசைகள், உடல் உறுப்புகள், வானம், பூச்சிகள், தாவரம், ஊர்வன, பருவ காலம்
- **எழுத்துப் பயிற்சி**: எளிய முறையில் எழுத மற்றும் படங்கள் வரைய பயிற்சி.
- குழுக்களாக சேர்த்து பாடுதல் மற்றும் உரையாடுதல்.
- பொது அறிவுக் கதைகள்.

- **வயது வரம்பு**: நான்கு வயது முதல் ஐந்து வயது வரை .
- இந்த நிலையின் முடிவில் உயிர் எழுத்துக்கள், சில பாடல்கள் மற்றும் கதைகளுடன் சுமார் ஐம்பது (50) எளிய தமிழ் வார்த்தைகள் தெரிந்திருக்க வேண்டும்.

# நிலை ஒன்று

**தமிழ் மொழி அறிமுக நிலை ----உயிர்/ மெய் எழுத்துக்கள்**

- உயிர் மற்றும் மெய் எழுத்துக்களை அறிதல்/ இனம் காணுதல்.
- எளிய முறை எழுத்துப் பயிற்சி.
- சிறிய கதைகள், பாடல்கள், படங்களைப் பார்த்துப் பெயர் கூறுதல் மற்றும் ஆத்திச்சூடி.
- வயது வரம்பு: ஐந்து வயது முதல் ஆறு வயது வரை .
- இந்த நிலையின் முடிவில் உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், சில பாடல்கள் மற்றும் கதைகளுடன் சுமார் 100 எளிய தமிழ் வார்த்தைகள் தெரிந்திருக்க வேண்டும்.

---

# நிலை 2:

- <u>தமிழ் மொழி அறிமுக நிலை )ஒன்று).உயிர்மெய் எழுத்துக்கள் -</u>
- ஆறு வயதிற்கு மேற்பட்ட, புதிதாக தமிழ் கற்க வரும் குழந்தைகளுக்கு தமிழ் கற்க ஆரம்பிப்பதற்கு ஏற்ற நிலையாக இந்த நிலை 2 உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மொழி எழுத்துக்கள் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் பயிற்றுவிக்கப் படுகிறது. இந்த இரண்டு ஆண்டுகளில் முதல் ஆண்டு இந்த நிலை 2 ஆகும். மேலும் நிலை 3 க்கான முன் தகுதியான நிலையாகவும் இது இருக்கிறது.
- தமிழ் எழுத்துக்களை இனிய முறையில் அறிமுகப்படுத்தி ஒரு இருநூறு சொற்களையாவது பழக்கத்தில் கொண்டுவருவது இந்த நிலையின் முக்கிய நோக்கமாகும். இந்த தமிழ் எழுத்துப் பாடங்களின் நிரல் பொள்ளாச்சி நசன் ஐயா அவர்களின் பல்லாண்டு கல்வி ஆராய்ச்சியின் அடிப்படையில் அமைந்தது ஆகும்.
- சரியான உச்சரிப்பும், சிறு சொற்றொடர்களைப் பேசிப்பழகுதலும் இந்த நிலையின் சிறப்புக் கவனமாகும்.
- பாடங்கள் மிகவும் எளிமையான எளித்துக்களான ட ப ச எழுத்துக்களில் ஆரம்பித்து படிபடியாக பெரிய எழுத்துக்களை நோக்கி போகிறது. ஒவ்வொரு பாடத்திலும் இந்த எழுத்துக்களால் ஆன எளிய சொற்கள் படங்கள், கதைகள் மற்றும் பாடல்கள் மூலம் விளக்கப்படுகிறது. எழுத்துப்பயிற்சியும் உண்டு. இடை இடையே ஆத்திச்சூடி/ திருக்குறள் / பழமொழி என்று கொடுத்திருப்பது இன்னும் ஒரு சிறப்பு.

- குழுவாக தமிழ் பேசி விளையாடுதல், சேர்ந்து பாடுதல், சிறு கதை சொல்லுதல் ஆத்திச்சூடி/திருக்குறள் மனப்பாடப் பகுதி, கணினி ஒளி ஒலி காட்சிகள் ஆகியவை மாணவரின் திறமைக்கேற்ப படிக்கும் வேட்கையை அதிகரிக்கும் கூறுகளாக இருக்கிறது.
- பாடப்புத்தகம் ஆசிரியர் அல்லது பெற்றோரின் துணையுடன் கற்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தவிர ஒரு பயிற்சிப் புத்தகமும் (Daily Homework Book) உண்டு.
- ஒவ்வொரு நாளும் 30 மணித்துளிகள் செலவிடும்படியான பயிற்சிகள் பயிற்சிப்புத்தகத்தில் கொடுக்கபட்டிருகின்றன. புத்தகக் கடைசியில் ஒரு நிலை இரண்டுக்கான ஒரு சொல் திரட்டும் உள்ளது.

# நிலை 3 - பாடத்திட்டம்

**தமிழ் மொழி அறிமுக நிலை - உயிர்மெய் எழுத்துக்கள் (பகுதி இரண்டு)**

- அமெரிக்க தமிழ்க் கல்விக்கழகப் பாடத்திட்டத்தின் இரண்டாம் நிலையைப் பயின்ற ஏழு வயதிற்கு**ம்** மேற்பட்ட குழந்தைகள், தொடர்ந்து தமிழைக் கற்பதற்கு ஏற்ற நிலையாக இந்த **மூன்றாம்** நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மொழி எழுத்துக்கள் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் பயிற்றுவிக்கப் படுகிறது. **அ**ந்த இரண்டு ஆண்டுகளின் இரண்டாம் ஆண்டு இந்த நிலை **3** ஆகும்.
- தமிழ் உயிர்மெய் எழுத்துக்களில் எகர வரிசை உயிர்மெய் எழுத்துக்கள் வரை இரண்டாம் நிலையில் பயின்ற குழந்தைகளுக்கு தொடர்ச்சியாக மற்ற அனைத்து உயிர்மெய் எழுத்துக்களைப் பயிற்றுவிப்பதும், மிக எளிய முறையில் தமிழ் இலக்கணத்தினை அறிமுகப் படுத்துவதும், குறைந்தது அறநூறு சொற்களையாவது பழக்கத்தில் கொண்டுவருவதும் இந்த மூன்றாம் நிலையின் முக்கிய நோக்கமாகும். இந்த தமிழ் எழுத்துப் பாடங்களின் நிரல் பொள்ளாச்சி **திரு**.நசன் ஐயா அவர்களின் பல்லாண்டு கல்வி ஆராய்ச்சியின் அடிப்படையில் அமைந்தது ஆகும்.
- சிறு சொற்றொடர்களைப் வாசித்துப்பது மட்டுமல்லாமல், அதன் அடுத்த நிலையான கதை வடிவில் உள்ள சிறிய பத்தியை வாசிப்பது மற்றும் எழுதுவது**ம்** இந்த நிலையின் சிறப்பு ஆகும். ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் ஔவை**யாரின்** அமுத மொழிகளான ஆத்திச்சூடி அல்லது **வள்ளுவரின்** திருக்குறள் மற்றும் பழமொழிகள் தமிழ்/ஆங்கில உரையுடன்

கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் நிலையில் ஔவையின் ஆத்திச்சூடிகளில் உயிர்வருக்கமும் உயிர்மெய் வருக்கமும் பயின்றபிறகு, இந்த நிலை மூன்றில் *ககர, சகர, தகர, நகர, பகர, மகர* மற்றும் *வகர* வருக்க ஆத்திச்சூடி**கள்** பயிற்றுவிக்கப் படுகி**ன்றன**.

- மற்ற நிலையில் உள்ளதைப் போன்று இந்த நிலையிலும் ஒரு பயிற்சிப் புத்தகம் **(Daily Homework Book)** உள்ளது. ஒவ்வொரு நாளும் **30** மணித்துளிகள் செலவிடும்படியாக பயிற்சிகள் இந்தப் பயிற்சிப்புத்தகத்தில் கொடுக்கபட்டிருக்கின்றன. புத்தகத்தின் கடைசியில் இந்த நிலை மூன்றிற்காக ஒரு சொல் வங்கி உள்ளது.

# பாடம் 3. நிலை 2 பாடத்திட்டம்

நிலை இரண்டின் இறுதி இலக்கு: நிலை இரண்டிற்கான சொற்களை பிழையின்றிப் படித்தல் மற்றும் படித்ததை உணர்ந்து வெளிப்படுத்துதல் (பேசுதல், எழுதுதல், நடித்துக்காட்டுதல்...)

< to be updated >

| பாடங்கள் | எழுத்துக்கள் / இரட்டை எழுத்துக்கள் | சொல் / படத்துடன் | கதை | பாடல் | ஆத்திச்சூடி / திருக்குறள் | கலந்துரையாடல் |
|---|---|---|---|---|---|---|
| வகுப்பு 1 | ட் ,ப்,ம்,ச்<br>ட, ப, ம, ச<br><br>டப், பட், மம், சச்,<br>டம்,சட் | படம், பட்டம், கப்பல், பாப்பா,<br>ஓடம், வட்டம, பல், அடுப்பு,<br>மரம்,மாம்பழம்சக்கரம், நீச்சல்,<br>மலை,மத்தளம், சங்கு, பச்சை | ஆற்றைக் கடந்த குட்டிக்குதிரை | ஓடி விளையாடு பாப்பா - 8 வரிகள் | ஆத்திச்சூடி 6 வரிகள் திருக்குறள் - 391 | கோடை விடுமுறை |
| வகுப்பு 2 | க்,த் ,ந்,வ்<br>க, த, ந, வ<br><br>கத், வத, வ்வ, தந்,<br>தவ | கரும்பு, கப்பல், மூக்கு, வணக்கம்<br>தட்டு, கதவு, புத்தகம், மூக்குத்தி<br>நண்பன், நகை, ஆந்தை, பந்து<br>வளையல், வடை,செவ்வானம்,<br>செவ்வகம் | புழு எங்கே? (TN page.61) | ஓடி விளையாடு பாப்பா 8 வரிகள் | ஆத்திச்சூடி 6 வரிகள் திருக்குறள் - 34 | வார நாட்கள் சொல்லிப்பழகுதல் |
| வகுப்பு 3 | ய, ய், ர, ர், ல, ல்,<br>ன, ன்<br><br>யர், ன்ன, ரல், ரன் | வயல், பையன், நாய், வெங்காயம்,<br>பம்பரம், கடிகாரம், சுவர், இளநீர்<br>மலர், நிலம், கோவில், மின்னல்<br>நடனம், வானம், மீன், மான் | story001.pdf -- **கதை எண் 2 - மல்லிகைச் செடி** | பசுவும் கன்றும் TN std 02-tamil-1.pdf Page 81 | ஆத்திச்சூடி 6 வரிகள் திருக்குறள் - 140 | பூங்காவும், அங்கு காண்பவையும் |
| வகுப்பு 4 | ண, ண், ள, ள். ழ, ழ், ங, ங்<br><br>ண்ண, ள்ள,ழங், | வணக்கம், வண்ணம்<br>தண்ணீர், குளம்<br>பள்ளம், பள்ளிக்கூடம்<br>பழங்கள், தாழ்ப்பாள் | வளைந்த மரம் ( ATA 2.2- page 40) | மரம் வளர்ப்போன் TN std 02- | ஆத்திச்சூடி 6 வரிகள் திருக்குறள் - 250 | விருந்தினரை உபசரித்தல் (வகுப்புப் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ணங் | சிமிழ், பூங்கா<br>வெங்காயம் | | tamil-1.pdf<br>Page 40<br>"தாத்தா வைத்த தென்னை யுமே" | | பயிற்சி) |
| வகுப்பு 5 | ஞ, ஞ், ற, ற், அ, ஆ<br>ஞ்ஞ, ற்ற, அற்,<br>அஞ், ஆற் | ஊஞ்சல், மஞ்சள்<br>இறகு, பறவை<br>நாற்காலி, புற்று<br>அணில், அம்மா<br>ஆமை, ஆடு | story001pdf. **கதை எண் 6** **ஆட்டுக்குட்டி** | **TN Std02-Tamil-1.pdf (page no.1 சிட்டு - சிட்டே சிட்டே பறந்துவா(** | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 152 | **TN Std02-Tamil-1.pdf page No.: 5 (கேட்க, செய்க(!** |
| வகுப்பு 6 | இ,ஈ,உ,ஊ,எ | இலை, இஞ்சி<br>ஈக்கள், ஈட்டி<br>உலகம், உண்டியல்<br>ஊதல், ஊசி<br>எறும்பு, எலி | சிறுவர் காத்த சின்ன யானை ((TN - pg.90) | காய்கறிகள் - ATA pg.38 | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 34 | விடையைக் கண்டுபிடித்து வரை, எழுது: **TN Std02-Tamil-1.pdf page No.: 22** |
| வகுப்பு 7 | ஏ,ஐ,ஒ,ஓ,ஔ | ஏணி, ஏடு<br>ஐவர், ஐந்து<br>ஒட்டகம், ஒலிபெருக்கி<br>ஓடம், ஓநாய்<br>ஔடதம், ஔவையார் | story001pdf. **கதை எண் 8**<br>வாழை மரம் | பாப்பாவுக்கு அறிவுரை 'பள்ளிக்குத்தான் போகணும்'' | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 300 | வீட்டு மிருகங்கள், காட்டு மிருகங்கள் |
| பாடங்கள் | எழுத்துக்கள் / இரட்டை எழுத்துக்கள் | சொல் / படத்துடன் | கதை | பாடல் | ஆத்திச்சூடி / திருக்குறள் | கலந்துரையாடல் |
| வகுப்பு 8 | கா,சா,டா,தா,பா, றா<br>காசா, பாடா,<br>தாறா, டாபா | காகம், காசு, சாலை, சாதம்<br>டாலர், தட்டான், தாத்தா, தாவரம்<br>பாட்டு, பாலைவனம், புறா, சுறாமீன் | கழுதையின் மூளை ATA 2.2. page 33 | அக்காள் வீட்டுத் தோட்டம் (ATA2.1-pg.23) | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 396 | வாசித்துப் பழகுக (ATA 2.1-pg.41) |
| வகுப்பு 9 | யா,ரா,லா,வா,ழா, ளா<br>வாளா, வாழா,<br>லாரா, யாரா,<br>வாரா | கொய்யாப்பழம், நோயாளி,<br>ராட்டினம், திராட்சை, பலாப்பழம்,<br>புலால், வானவில், வாள், வாத்து<br>திருவிழா, குழாய், காளான் | story001pdf. **கதை எண் 10**<br>பச்சைக்கிளி | எங்கள் அம்மா (ATA 2.1 pg.32) | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 400 | வாசித்துப்பழகுக (ATA 2.2 page.20) |
| வகுப்பு 10 | ஙா,ஞா,ணா,நா, மா,னா<br>மானா, நானா,<br>நாமா, ஞானா | ஞாலம், அண்ணா, விஞ்ஞானம்,<br>நாடகம், நாக்கு, நாணயம்,<br>மாதுளம்பழம், மாலை, கனா, வினா, | குட்டி முயல் (TN 2nd std page 69) | வனத்திலே ஒரு திருவிழா (TN-3rd std. pg.2- 2nd,3rd para) | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 392 | படித்துப் பழகுக ATA 2.1 page 71 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வகுப்பு 11 | கி,சி ,டி,தி,பி,றி<br>சிடி, திறி, பிறி, கிடி, சிபி | கிண்ணம், கிளி, சிங்கம், சிலந்தி<br>கண்ணாடி, அங்காடி, குருதி, சோதி<br>பின்னல், பிளவு, வெற்றிலை, பன்றி | story001pdf. **கதை எண் 12**<br><br>கருப்புப் பூனையும் எலியும் | பறவைகள் பலவிதம் | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 71 | எண்கள் சொல்லிப்பழகுக<br>11 முதல் 20 |
| வகுப்பு 12 | யி ,ரி,லி ,வி ,ழி , ளி<br>விழி, விளி, யிரி, விரி | மயில், கயிறு, ஏரி, வரிக்குதிரை<br>புலி, பல்லி, விண்வெளி,<br>விளையாட்டு, விழி, குழி<br>தக்காளி, காவலாளி | story001pdf. **கதை எண் 18**<br><br>தண்ணீர்த் தொட்டி | திசைகள்<br>ATA 2.1 page 65 | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 80 | எண்கள் சொல்லிப்பழகுக<br>21 முதல் 30 |
| வகுப்பு 13 | ஙி ,ஞி ,ணி ,நி ,மி, னி<br>நிமி, மினி, மிணி, ஞிணி | ஏணி, மணி, நிறம், நிலா, மிட்டாய்,<br>மிளகாய், கனி, பனி, | story001pdf. **கதை எண் 19**<br>**மைனா குருவி** | குளத்திலுள்ள கொக்கு | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 190 | எண்கள் சொல்லிப்பழகுக<br>31 முதல் 50 |
| வகுப்பு 14 | கீ,சீ ,டீ,தீ,பீ,றீ<br>கீசீ, தீடீ, பீறீ, சீறீ | கீற்று, கீரி, கீறல்<br>சீனர், சீரகம்<br>தீபம், தீப்பொறி, தீப்பந்தம்<br>பீர்க்கங்காய், பீடம், பீங்கான் | story001pdf. **கதை எண் 21**<br><br>சேமிப்பு | யானை | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 204 | எண்கள் சொல்லிப்பழகுக<br>51 முதல் 70 |
| வகுப்பு 15 | யீ ,ரீ ,லீ ,வீ,ழீ ,ளீ<br>யீலீ, வீழீ, வீரீ, ரீளீ | வீக்கம், வீரன், வீடு, வீதி, மயிற்பீலீ | குதிரையும் ஓநாயும் | மியாவ் மியாவ் பூனையார் | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 224 | எண்கள் சொல்லிப்பழகுக<br>71 முதல் 90 |
| வகுப்பு 16 | ஙீ ,ஞீ ,ணீ,நீ,மீ,னீ<br>மீனீ, நீமீ, ணீனீ, நீனீ | தண்ணீர், கண்ணீர், நீலநிறம், நீச்சல்,<br>இளநீர், மீசை, மீன்தொட்டி<br>தேனீ, பன்னீர் | பஞ்சும் உப்பும் | குறள் படி | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 221 | எண்கள் சொல்லிப்பழகுக<br>91 முதல் 100 |
| வகுப்பு 17 | கு,சு,டு,து,பு,று<br>சுடு, துறு, புது, குறு | குழந்தை, குங்குமம், குரங்கு, பரிசு,<br>மஞ்சுவிரட்டு, பசு, லட்டு, வண்டு,<br>சுண்டுவிரல், துடுப்பு, துண்டு, பத்து,<br>எருது, துறவி, முறுக்கு, எறும்பு, புற்று | ஏமாந்து போன வேலைக்காரர்கள் | இரயில் வண்டி | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 953 | தமிழ் மாதங்கள் |
| பாடங்கள் | எழுத்துக்கள் / இரட்டை எழுத்துக்கள் | சொல் / படத்துடன் | கதை | பாடல் | ஆத்திச்சூடி / திருக்குறள் | கலந்துரையாடல் |
| வகுப்பு 18 | யு,ரு,லு,வு,ழு,ளு<br>யுரு, ருளு, யுவு, வுழு | யுத்தம், யுவன், கருப்பு, எருமைமாடு<br>எலும்பு, கொலுசு, கனவு, கதவு,<br>ஏவுகணை, உணவு, புழு, கழுத்து,<br>கையெழுத்து, பளு, உளுந்து,சுளுக்கு | மான் கொம்பு | கடமுட, கடமுட வண்டி | ஆத்திச்சூடி 6 வரிகள்<br>திருக்குறள் - 1000 | விலங்குகளின் ஒலிகள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வகுப்பு 19 | ஙு,ஞு,ணு,நு,மு,னு முணு, நுணு, முனு | கணுக்கால், நுரை, நுரையீரல் முகம், முட்டை, முள் | அவசரக் குடுக்கை | கடிகாரம் | ஆத்திச்சூடி 5 வரிகள் திருக்குறள் - 400 | அடுக்குத் தொடர்கள் |
| வகுப்பு 20 | கூ,சூ,டூ,தூ,பூ,றூ சூடூ, தூறூ, கூறூ, பூசூ | கூடு, கூட்டம், கூடாரம், சூரியன், சூல், குண்டூசி, தூக்கம், தூறல், தூரிகை, தூளி, பூக்கள், பூனை, பூச்சி, பூட்டு, பூமி, பூகம்பம் | பேராசை கொண்ட காகம் | எங்கள் வீட்டு நாய்க்குட்டி | ஆத்திச்சூடி 5 வரிகள் திருக்குறள் - 355 | அறுசுவைகள் |
| வகுப்பு 21 | யூ,ரூ,லூ,வூ,ழூ, ளூ யூரூ, ரூலூ, யூழூ, ரூழூ | கல்லூரி, பலூன் ரூபாய் | ’எது உண்மையான அழகு?’ | பசு )ref.ATA 2.1 - page 80 | ஆத்திச்சூடி - 6 வரிகள் திருக்குறள் 303 | உறவுமுறைகளின் பெயர்கள் |
| வகுப்பு 22 | நூ,ஹூ,ணூ,நூ,மூ, னூ மூணூ, நூமூ, ஹூனூ | மூளை, மூங்கில், மூட்டு, மூட்டை நூலகம், நூல், பூணூல், எண்ணூறு நானூறு, வானூர்தி | **story001.pdf )** கதை 4. பட்டாம்பூச்சி | TN Std02-Tamil-1.pdf-1 **9. ஆசை ! ஆசை (page nos. 14 & 15)** | ஆத்திச்சூடி - 6 வரிகள் திருக்குறள் 78 | சரியான உச்சரிப்பு பயிற்சி |
| வகுப்பு 23 | கெ,செ,டெ,தெ,பெ ,றெ பெறெ, செறெ, தெறெ, கெடெ | செங்கல், செருப்பு, செடி சுண்டெலி தெப்பம், தென்னைமரம் பெட்டி, பெண், பெங்குவின் | **story001.pdf எண் 5. வேப்பமரம்** | **Ref.ATA 2.2 page 14. கிளிப்பாட்டு.....** | ஆத்திச்சூடி - 6 வரிகள் திருக்குறள் 140 | நிறங்கள் |
| வகுப்பு 24 | யெ,ரெ,லெ,வெ, ழெ,ளெ யெரெ, வெலெ, வெளெ, ரெவெ | எண்ணெய், வெங்காயம், வெளிச்சம், வெயில், வெள்ளம், வெல்லம், புல்வெளி, வெண்ணெய், விண்வெளி, வெள்ளெலி | **story001.pdf கதை** 1 **குட்டி நாய்** | **ATA 2.1 page no.47 - 'எண்கள்- ஒன்று யாவர்க்கும் தலை ஒன்று’** | ஆத்திச்சூடி - 6 வரிகள் திருக்குறள் 70 | வகுப்பறையும் அங்கு காண்பவையும் சொல்க / எழுதுக |
| வகுப்பு 25 | ஙெ,ஞெ,ணெ,நெ, மெ,னெ நெமெ, ஞெணெ, மெனெ | எண்ணெய், வெண்ணெய் நெற்றி, நெல்வயல், நெய் மெட்டி, மெத்தை, பதினெட்டு | **story001.pdf - கதை எண் 3 - காகமும் சுடரொளியும்** | **ATA 2.1 page 42 - நிலா நிலா ஓடி வா** | ஆத்திச்சூடி - 6 வரிகள் திருக்குறள் 322 | பொங்கல் விழா பற்றிப் பேசுக |

- இந்தப் புத்தகம் மாணவர்களே சுயமாகப் படிக்ககூடிய புத்தகம் அல்ல. உங்கள் வழிகாட்டுதல் கண்டிப்பாக தேவை. (ஆனால் பயிற்சிப்புத்தகம் மாணவர்கள் தனியாக செய்யக்கூடிய புத்தகம் ஆகும்)

- எந்த ஒரு பாடத்திலும் அது வரை படிக்காத எழுத்துகள் வராமல் பார்த்துக்கொண்டுள்ளோம். எழுத்துக் குழப்பம் வராது. (வட்டமிடுதல், பாடல்கள் தவிர - இங்கே சொல்லுதல் மட்டும்)
- இங்குள்ள அனைத்து பயிற்சிகளும் வகுப்புப் பயிற்சிகளே. ஆனால் சில பயிற்சிகளை ஆசிரியர் வீட்டுப் பாடமாகவும் கொடுக்கலாம்.
- சித்திரமும் கைப்பழக்கம். செந்தமிழும் நாப்பழக்கம்!
- ஒவ்வொரு பயிற்சியிலும் எது பொது நோக்கமாக இருக்கவேண்டும் என்பது கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:-

| பயிற்சிகள் | சத்தமாக படி | எழுத்தை மனப்பாடம் செய் | பொருளை மனப்பாடம் செய் | பார்க்காமல் சொல்லை எழுதிப்பழகு | பார்க்காமல் சொல்லிப் பழகு |
|---|---|---|---|---|---|
| எழுத்துக் கூட்டிப் படித்துப் பழகுக. சத்தமாக சொல்லிப்பழகுக | √ | X | X | X | X |
| படம் பார்த்து சத்தமாக சொல்லிப் பழகுக. | √ | √ | √ | √ | √ |
| எழுதிப் பழகுக | √ | √ | X | √ | X |
| கோடிட்ட இடங்களை நிரப்புக - உயிர்மெய் எழுத்து | √ | √ | X | X | √ |
| கோடிட்ட இடங்களை நிரப்புக- சொற்கள் | √ | √ | √ | √ | √ |
| பொருத்துக | √ | √ | √ | √ | √ |
| மொழிபெயர் | √ | √ | √ | √ | √ |
| வட்டமிடும் பயிற்சி | X | √ | X | X | X |
| பாடல்/ திருக்குறள்/ | X | X | √ | X | √ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆத்திச்சூடி | | | | | |
| சிறுகதை | X | X | √ | X | √ |

## பாடம் 4. பாடப் புத்தக விளக்கங்கள்

### 1. உயிரெழுத்துகள் – சொல் பயிற்சி மட்டும்

4.1. சத்தமாக சொல்லிப்பழகுக. உயிரெழுத்துகள் 12

இணையா சுட்டி : யு டியுப்

4.2. படம் பார்த்து சத்தமாக சொல்லிப் பழகுக.

இணையா சுட்டி : யு டியுப்

4.3. சத்தமாகப் பாடிப் பழகுக.

இணையா சுட்டி : யு டியுப்

4.4. சத்தமாக சொல்லிப்பழகுக.

இணையா சுட்டி : யு டியுப்

<அனைத்துப் பாடப்புத்தகப் பாடங்களும் இங்கே வரவேண்டும் >

## பாடம் 5. பயிற்சிப் புத்தக விளக்கங்கள்

- இந்தப் பயிற்சிப்புத்தகம் மாணவர்களே சுயமாகப் படிக்கக்கூடிய, தனியாகச் செய்யக்கூடிய புத்தகம் ஆகும். உங்கள் வழிகாட்டுதலின் தேவை மிகக்குறைவானதே!
- எந்த ஒரு பாடத்திலும் அது வரை படிக்காத எழுத்துகள் வராமல் பார்த்துக் கொண்டுள்ளோம். எழுத்துக் குழப்பம் வராது. (வட்டமிடுதல், பாடல்கள் தவிர - இங்கே சொல்லுதல் மட்டும்)
- வட்டமிடுதல், பாடல்கள் - நீங்கள் படித்துச் சொல்லிக்கொடுங்கள். சரியாக உச்சரிக்க உதவுங்கள். எழுதவோ படிக்கவோ தேவையில்லை.
- படங்களின் பெயர்களை எழுதும்போது பாடத்தில் இல்லாத வேறு தமிழ்ச் சொற்களை மாணவர்கள் எழுதி வந்தால் நலமே! அதே பாடச் சொல்லை எழுதவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

## பாடம் 6. உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள் - சொல் பயிற்சி மட்டும்

6.1. பாடப்புத்தகப் பயிற்சிகள் மீள்பார்வை (REVIEW OF TEXT BOOK EXERCISES):

| எண் | செயல் | முடித்த தேதி (Completed Date) : |
|---|---|---|
| 1.1. | சத்தமாகச் சொல்லிப்பழகுக - உயிரெழுத்துகள் 12 மற்றும் ஆயுத எழுத்து: | |
| 1.2. | படம் பார்த்துச் சத்தமாகச் சொல்லிப் பழகுக: | |
| 1.3. | சத்தமாகப் பாடிப் பழகுக: | |
| 1.4. | சத்தமாகச் சொல்லிப்பழகுக:. மெய்யெழுத்துகள் 18 : | |
| 1.5. | சத்தமாகச் சொல்லிப்பழகுக: | |

| | | |
|---|---|---|
| | உயிர்மெய்யெழுத்துகள்: | |
| 1.6 | சத்தமாகச் சொல்லிப்பழகுக: | |
| 1.7 | திருக்குறள்: | |


6.2. மனப்பாடம் செய்து பெற்றோரிடம் பார்க்காமல் சொல்லிக்காட்டவும் (Memorize and tell your parents) From A to Ak அ முதல் ஃ வரை

5 முறை தொடர்ந்து தவறில்லாமல் மனப்பாடமாக சொல்லவேண்டும்.

6.3. மனப்பாடம் செய்து பெற்றோரிடம் பார்க்காமல் சொல்லிக்காட்டவும் (Memorize and tell your parents ஒன்று முதல் பத்து வரை

5 முறை தொடர்ந்து தவறில்லாமல் மனப்பாடமாக சொல்லவேண்டும்.

6.4. படம் பார்த்துப் பெயரைச் சத்தமாகச் சொல்லவும். Say aloud the name of the pictures.

| | | | | | |
|---|---|---|---|---|---|
|  ஐவர் |  இலை |  அவ்வை |  அணில் |  ஊஞ்சல்/யானை |  ஒட்டகம் |
|  உழவர் |  ஓணான் |  ஏணி |  ஈ |  ஆடு |  எலி |

<அனைத்துப் பாடப்புத்தகப் பாடங்களும் இங்கே வரவேண்டும் >

# பாடம் 7. தேர்வு மாதிரி வினாத்தாட்கள்

*குறிப்புகள் :* பெயர்:____________________________

*1. எழுத்துத் தேர்வு: 60 மதிப்பெண்கள். வாய்வழித் தேர்வு: 40 மதிப்பெண்கள்; மொத்தம் :100*

*2. நேரம் : 2 மணி நேரம் (இரண்டு பகுதிகளுக்கும் சேர்த்து)*

*3. தேர்வர் குறிப்பு: எழுத்துத் தேர்வுப் பகுதியை மாணவரிடம் கொடுக்கவும். முடித்தவுடன் வாய்வழித்தேர்வுப் பகுதியை நீங்கள் வைத்துக்கொண்டு கேள்வி கேட்கவும். இரண்டு பகுதிகளையும் இணைத்து வைத்துக்கொள்ளவும்.*

பகுதி 1 - எழுத்துத் தேர்வு (60 மதிப்பெண்கள்) –

1. *கோடிட்ட இடங்களை நிரப்புக: Fill in the Blanks (5 Marks)*

| | | |
|---|---|---|
| ல் + உ = ____________ | வ | + |
| க் + உ = ________ | ணீ | + |
| ள் + ஊ = _______ | டா | + |
| _______ + ஈ = தீ | டு | + |
| ய் + உ = _____________ | னூ | + |

2. சரியான சொல்லை எடுத்து எழுதவும்: Choose and write the correct translation: 10 Marks

*செவ்வாய்,குடம்,மூங்கில்,சிறிய,இரவு,மூக்கு,வெங்காயம்,காடு,உப்பு,முகம்*

| | | | |
|---|---|---|---|
| Night | | Face | |
| Nose | | Bamboo | |
| pot | | forest | |
| salt | | Onion | |
| Small | | Tuesday | |

3. தமிழில் மொழிபெயர் - Translate in to Tamil (10 Marks)

| | |
|---|---|
| He stood on the bridge | |
| He watched the drama | |
| She ate tomato | |
| Cow gives milk | |
| He cried | |

4. கீழே உள்ள திருக்குறள்களில் கி,பி,ணி,னி,று எழுத்துகளைச் சுழிக்கவும் - Circle the letters கி,பி,ணி,னி,று 10 Marks

| | |
|---|---|
| **கி**<br>* பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி<br>அல்லவை செய்தொழுகு வார்.<br><br>* இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி<br>மாசறு காட்சி யவர்க்கு. | **பி**<br>* என்பி லதனை வெயில்போலக் காயுமே<br>அன்பி லதனை அறம்.<br><br>* பரிந்தோம்பிப் பற்றற்றேன் என்பர் விருந்தோம்பி<br>வேள்வி தலைப்பட தார். |
| **ணி**<br>* எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்<br>திண்ணிய ராகப் பெறின்.<br><br>* வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்<br>பிறவும் தமபோற் செயின். | **னி**<br>* குழலினிது யாழினிது என்பதம் மக்கள்<br>மழலைச்சொல் கேளா தவர்.<br><br>* இனிய உளவாக இன்னாத கூறல்<br>கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. |
| **று**<br>* ஒறுத்தாற்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்<br>பொன்றுந் துணையும் புகழ்.<br><br>* பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்<br>பற்றுக பற்று விடற்கு. | |

5. சரியான சொல்லை எடுத்து எழுதவும் 5 Marks

(பீப்பாய், கிளிஞ்சல், பல்லி, கணினி, கத்தரிக்காய், நிழல், பீரங்கி, விண்கல்)

| | |
|---|---|
| Barrel | |
| Shadow | |

| | |
|---|---|
| Eggplant | |
| Cannon | |
| Lizard | |

6. கோடிட்ட இடங்களை நிரப்புக: (Fill in the blanks) 5 marks.





1. க__ப்பு (Black)
2. ____க்கம் (Swelling)
3. க_____னி (Computer)
4. சிலந்____ (Spider)
5. பரி_____(Prize)
6. பழச்சா____ (Fruit Juice)
7. ____தி (Street)
8. ___ன்னல் (Braid)
9. வ_____கர் (Businessman)
10. ____திபதி (Judge)

7. இந்த ஒலிகளுக்கான தமிழ் எழுத்துக்களை கண்டுபிடித்து ஐந்து முறை எழுதுக Write Tamil letters sounding like the below and write 5 times. 5 marks.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| lee | | | | | |
| lu | | | | | |
| ru | | | | | |
| vee | | | | | |
| yu | | | | | |

8. ஏதேனும் பத்து தமிழ் மற்றும் ஆங்கிலப் பெயர்களைப் படத்திற்கு மேலுள்ள கட்டத்தில் எழுதவும்Write . the Tamil and English names of theANY TEN .above the pictures objects 10 Marks

| | | |
|---|---|---|
| Example: Camel | | |
| ஒட்டகம் | | |

| | | |
|---|---|---|
|  |  |  |
| | | |
| | | |
|  |  |  |
| | | |
| | | |
|  |  |  |
| | | |
| | | |
|  |  |  |

## பகுதி 2 - வாய்வழித் தேர்வு (40 மதிப்பெண்கள்)

தேவைப்பட்டால் ஒரு காகிதத்தில் எழுதிக்காட்டவும்.

9. *உனக்கு நன்றாகத் தெரிந்த பாடப்பகுதியிலுள்ள இரண்டு திருக்குறள்களை மனப்பாடமாக ஒப்பிக்கவும்.* (2.5+2.5 மதிப்பெண்கள்) (Recite/Tell any 2 Thirukkurals from your book) - 2.5+2.5 Marks

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

10. *சத்தமாகச் வாசிக்கவும் - Read the following: (5 marks)*

- அவன் கணினியில் பாடம் பயின்றான் (He studied the lesson in the computer)
- சீக்கிரம் வா (Come soon)
- அழகிய பீங்கான் கிண்ணம் (Beautiful ceramic bowl)
- மீனவர் மீன் பிடித்தார் (The Fisherman caught fish)
- குரங்கு ஓடியது. (The monkey ran)

☐ ☐ ☐ ☐ ☐

11. *இந்த எண்களை* சொல்லுக (5 மதிப்பெண்கள்) (Say these numbers)

☐ **25** ☐ **55** ☐ **36** ☐ **45** ☐ **17**

12. இந்த படங்களை சொல்லுங்கள் Tell the things in Tamil (10 மதிப்பெண்கள்)

| | | | | |
|---|---|---|---|---|
|  ☐ | ☐  | ☐  | ☐  | ☐  |
| ☐  | ☐  | ☐  | ☐  | ☐  |

13. *ஏதேனும் ஐந்தை தமிழில் மொழி பெயர்த்து சொல்லவும் (5 மதிப்பெண்கள்)*

Lightning, Ceramic, Doctor, Prize, asteroid, Swimming, Pond


© அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

☐ ☐ ☐ ☐ ☐

14. **படிப்பும் பலாப்பழமும்** *என்ற தலைப்பிலான கதையைப் கூறவும் .(10 மதிப்பெண்கள்)*

உச்சரிப்பு :5 *marks* சரளம் :5 *Marks* கதை ஓட்டம் முக்கியமல்ல .

# பாடம் 8. ஆசிரியர் கையேடு

## ஊக்குவித்தல்

- தவழ்ந்து அமர்ந்து தள்ளாடித் தாள் நிமிர்ந்து எதையும் பிடிக்காமல் எழுந்து நிற்கும் குழந்தையொன்றைக் காணுகையில் நாம் மகிழோசை எழுப்புகிறோம்; கைத்தட்டுகிறோம்.
- அதிக மதிப்பெண் அறிவிக்கப்படுகையில் கரஒலி எழுப்பி ஆர்ப்பரிக்கிறோம்.
- விளையாட்டு விழாவில் வெற்றி பெறுவோரை வெற்றி மேடையில் ஏற்றிக் கர ஒலியும்; மகிழொலியும் நாம் எழுப்புகிறோம்.

எந்த 'ஒரு செயல்' ஒருவரை (மாணவரை) உடலியல் மற்றும் உளவியல் செயல்பாட்டிற்கு உட்படுத்தி, அதன் மூலம் ஒருவருடைய தேவையையும் விருப்பத்தையும் பூர்த்தி செய்ன்றதோ, அச்செயலே 'ஊக்குவித்தல்' எனப்படுகிறது. ஒரு மாணவன் தனது வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோளை அடைய கற்றல் மிக அவசியமானது. அக்கற்றலைத் தூண்டுவதும் ஊக்குவித்தலும் ஆசிரியரின் தலையாய கடமையாகும்.

## கற்றலை மேம்படுத்துவதில் ஊக்குவித்தலின் பங்கு

ஒருவர் கற்று மேம்பாடு அடைவது, அவருக்குக் கிடைக்கும் ஊக்கத்தைப் பொறுத்தே அமையும். மனிதருள் இருக்கும் ஊக்கமும் திட்பமும், மனிதர்களைச் செயல்படுத்தும் உந்துவிசைகளாகும். இத்தகு 'ஊக்கத்தையும் திடத்தையும்' ஆசிரியர், பெற்றோர், நண்பர்களின் தூண்டுதலால் பன்மடங்காக்க முடியும். ஓர் ஆசிரியரின் ஊக்குவிக்கும் குணநலன்களைப் பொறுத்தே அவருடைய மாணவர்களின் எண்ணங்களும், பண்பு நலன்களும் வெற்றியும் அமையும். ஒருவரின் ஊக்கத்தின் இயக்கிகளாகக் கருதப்படுவன அவருடைய எண்ணங்கள், மதிப்புகள், ஆளுமைத் தன்மை போன்றனவாகும்.

குறிக்கோள் அல்லது உந்துதல் இன்றி எந்த ஓர் உயிரியும், ஓர் அடிகூட நகருதல் இல்லை. சுருங்கக் கூறின், மனிதனின் ஒவ்வொரு நடத்தையும் சில

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

ஊக்குவித்தல்களாலேயே நிகழ்த்தப்படுத்தப்படுகிறது. ஓர் ஆசிரியரின் கற்பித்தல் செயல் சிறப்படைய வேண்டுமெனில் அவர் “மாணவர்களை ஊக்குவிப்பதில்” மிகுந்த திறனும், பட்டறிவும் பெற்றிருத்தல் வேண்டும்.


ஊக்கத்தின் பயன்கள் மாணவர்களின் வெற்றிகரமான கற்றல் அடைவுகளின் மூலம் வெளிப்படும். மாணவர்களிடையே உள்ள தனியாள் வேற்றுமைகளை அறிந்து, அவர்தம் திறனுக்கேற்ப பாடச்செறிவு, சூழ்நிலை முதலியவற்றைக் கருத்தில் கொண்டு ஊக்குவித்தல் நுட்பங்களை மாற்றியமைக்க வேண்டும். எனவே, மாணவர்களின் கல்விச்சாதனைகளை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பது ஊக்கம் எனப்படும் செயலார்வமே எனலாம்.

## ஊக்குவித்தலின் முக்கியத்துவம்

1. ஊக்குவித்தல் என்பது, உளவியல் சார்ந்த அணுகு முறையாகும்.
2. ஊக்கம் ஒரு செயலை ஆரம்பிக்க உந்துகிறது அதுவே அதனைத் தொடர்ந்து செய்யவும், தொய்விலாது முடிக்கவும் துணை நிற்கிறது.
3. ஊக்குவித்தல் கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துவதாகும்.
4. ஊக்கம் கற்போர்க்குத் தன்னம்பிக்கையை வளர்க்கும்.
5. ஊக்குவித்தல் கற்றலில் ஏற்பட்ட ஆர்வத்தை அதிகரிக்க வல்லதும் நிலைக்கச் செய்வதுமாகும்.
6. செயற்கு அரியனவற்றைச் செய்ய மாணவர்களை ஊக்கம் தூண்டுகிறது.
7. ஊக்கம் ஒரு இடுபொருள் எனில் ஆர்வமும், விடாமுயற்சியும் அதன் விளைபொருட்கள் எனலாம்.
8. இலக்கை அடையும் வரையில் உடனின்று வழிகாட்டுவதாக ஊக்கம் அமைகிறது.
9. ஒருவரின் உள்ளார்ந்த ஆர்வங்களைத் தூண்டி, தொடர்ந்து கற்க ஊக்கம் காரணியாகிறது.
10. ஊக்கம் இலக்குகளை அடைவதற்குப் புதிய வழிமுறைகளைக் கண்டறிய வழிவகுக்கிறது.

### ஊக்குவித்தல் - ஒரு சுழற்சி


© அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy




### 8.1. ஊக்குவித்தல் கோட்பாடுகள்

1. பாடத்திட்ட அளவில் குறிக்கோளை நிர்ணயித்தல் வேண்டும். அதற்கான பாதையில் முன்னேறிச் செல்ல வேண்டும். அந்தப் பாதையானது பல குறுகிய நோக்கங்களை உடையதாய் பல வழிகளில் செல்லுகிறது. ஒவ்வொரு குறுகிய நோக்கத்தையும் வெற்றி கொள்ளும்போது, ஊக்கம் பெற்று, சவால்களைச் சந்திக்கும் வகையில் மிகப் பெரும் குறிக்கோள்களை நாம் அடைய முடியும்.

2. எந்தச் செயலைச் செய்ய ஆரம்பித்தாலும், அதனை முழுவதுமாகச் செய்து முடிக்க வேண்டும். "இடை நிற்றல்" என்பது ஊக்கம் குறைவான மாணவர்களால் மேற்கொள்ளப்படும் ஓர் எதிர் மறையான செயல் எனலாம். இடைநிற்றலை வளரவிடாமல் தன்னூக்கத்துடன் செய்து முடிக்க வழிகாட்ட வேண்டும்.

3. எவ்வாறு கற்றுக் கொள்ள வேண்டும் என்பதைக் கற்க வேண்டும். மற்றவரைச் சார்ந்து கற்றுக் கொள்வதற்கு அதிக நேரம் பிடிக்கும். தானே கற்றல் உத்தியை நாம் கடைப்பிடிக்கும்போது எண்ணங்கள் விரிவடைந்து, கனவுகள் நனவாகும் வகையில் சூழ்நிலைகளை உருவாக்க முடியும்.

4. ஒருவருக்கு விருப்பத்தை ஏற்படுத்தும் ஊக்கிகளை, அவருடைய இயற்கையான உந்துதலோடு இணைத்தல் வேண்டும். இயற்கையான உந்துதல் ஊக்கத்தை

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

ஏற்படுத்துகிறது. ஊக்கம் - ஒரு செயலைச் செய்ய உத்வேகம் அளிக்கிறது. அந்த உத்வேகமானது செயலைச் செய்து முடிக்க உதவுகிறது.

5. பாட அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். பாடத்தை எவ்வளவு அதிகமாய் அறிந்து கொள்ள விரும்புகிறோமோ, அவ்வளவு அதிகமாய் அதனைக் கற்றுக் கொள்கிறோம்.

6. செயல்களைச் செய்யத் துணிவு கொள்ள வேண்டும். உண்மையில் கூறப்போனால் இடரும், பின்னுக்குத் தள்ளப்படுதலுமே ஊக்கத்தின் காரணிகளாகும். ஏனெனில், எதிரிடைகளே கற்றலுக்கான வாய்ப்புக்களைத் தருகின்றன.

### ஊக்கத்தை அதிகரிக்கும் உத்திகள்

1. பாராட்டும் பரிசுகளும் ஆர்வத்தை அதிகரிக்கின்றன. கற்றல் பதியைச் செம்மையுறச் செய்ய உந்துகின்றன. ஆனால் பரிசுகள், சரியான முறையில் சரியான நபருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.
2. ஒரு செயலைச் செய்து முடிப்பதற்கான செயல் திறமையும், நடத்தையும் வகுப்பறை எதிர்பார்ப்புகளுக்கேற்பப் போதுமான அளவில் தெளிவாகக் கூறப்பட வேண்டும்.
3. தாங்கள் கூறும் கருத்துகள் மற்றவர்களால் வரவேற்கப்பட்டதாகவும் மற்றவர்கள் உறுதுணையாய் நிற்பதாகவும் மாணவர்களை உணரச் செய்தல் வேண்டும்.
4. மாணவர்களின் கேள்விகளுக்கு உடனடியாய், நேர்மறையான பதில்களைக் கூறுவதோடு அவர்கள் செய்யும் அரிய செயல்களுக்காக அவர்களைப் பாராட்டுதலும் அவசியமாகும்.
5. கடினமான செயல்களைப் பிரித்துச் சிறுசிறு செயல்களாக்கி ஒவ்வொன்றாகச் செய்து முடிக்க வழிக்காட்ட வேண்டும்.
6. எதைச் செய்தாலும் அதை முழுமையாகச் செய்ய ஊக்குவிக்க வேண்டும்.
7. முடிந்தவரை, மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை உடனுக்குடன் மதிப்பீடு செய்து முடிவுரைக்க வேண்டும்.
8. மாணவர்களை அவரவர் திறமைக் கேற்றவாறு மதிப்பீடு செய்ய வேண்டும். மற்ற மாணவருடன் ஒப்பிடுதல் கூடாது.
9. கற்றல் மற்றும் அதன் குறிக்கோள் இரண்டும் கற்றலின் உண்மைத் தன்மையை அதிகரிப்பதாக அமைய வேண்டும்.
10. பாடக் கருத்துகளை மாணவர் வாழ்க்கையோடு ஒப்பிட்டு, அவற்றை நடைமுறை வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற வேண்டும்.
11. ஓரளவு முறைதழுவிய கட்டுப்பாட்டோடு கற்றுக் கொள்ள மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க அனுமதியளிக்க வேண்டும்.

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

12. சவாலாய் அமையக் கூடிய, அதே சமயம் அவர்களால் செய்து முடிக்கக் கூடிய பதிகளை, வழங்க வேண்டும். துணிவுடன் மேற்கொள்ளுவோர், பின்தங்குவோர் மற்றும் குறைபாட்டுடன் கற்போர் போன்றோருக்கு அவரவர் நிலைக்கேற்ற ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.
13. கற்கும் பாடத்தில் ஒவ்வொருவருக்கும் இருக்கும் ஆர்வத்திற்கேற்றவாறு விருப்பத்தைத் தூண்டி விடுதல் அவசியமானதாகும்.
14. புதிய அறிவைப் பெற்றுக் கொள்ளும் வண்ணமும், கருத்துகளை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளும் வகையிலும் புதிய புதிய செயல்திட்டங்களை உருவாக்கி வழங்குதல் இன்றியமையாததாகும்.
15. மாணவர்களிடம் புதைந்திருக்கும் தனித்தன்மைகளை இனங்கண்டு ஊக்குவித்தல் அவசியம்.

### ஊக்கத்தின் வகைகள்

ஊக்குவித்தலை இரு வகையாகப் பிரிக்கலாம்.

1. அக ஊக்கம்

அக ஊக்கம் ஒருவரின் உள்ளார்ந்த உணர்வைத் தூண்டுதல், அதற்குப் பயன்படும் தூண்டுவிசை இவற்றுடன் நேரடித் தொடர்பு கொண்டதாகும். பிறர் வற்புறுத்தலுக்காகஅன்றித் தானாகவே, ஆசையாகக் கற்றலை இதற்கு உதாரணமாகக் கூறலாம். எந்த மாணவர்கள் அக ஊக்கம் பெற்றவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் தாம் மேற்கொள்ளும் செயலை மிகச் செம்மையாகச் செய்றார்கள். ஏனெனில் அதில் அவருக்கு முழு ஆர்வமும் ஈடுபாடும் உள்ளிருந்தே கிடைக்கிறது. அக ஊக்கம் ஓர் உள்ளூக்கம் ஆகும். புறக் காரணிகள் போலன்றி அக ஊக்கம் நீடித்து நின்று மகிழ்ச்சியூட்டிப் பதியை முடிக்கவல்லதாகும்.

ஒருவர் கணக்குகளுக்குத் தீர்வுகாணும்பொழுதும், செய்யுள் வாசித்து அதன் பொருளை உணரும்பொழுதும், பாடம் சம்பந்தமான அடிப்படைக் கருத்துக்களை வாசித்துப் பொருள் கொள்ளும் பொழுதும் மகிழ்ச்சி அடைகிறார். அவ்வாறு கற்றல் செயல்களில் ஈடுபடுவதும், மகிழ்ச்சி பெறுவதும் அவரது அக ஊக்கத்தினாலேயே எனலாம். அக ஊக்கம் தொடர் கவனத்தையும் நீடித்த செயலாற்றலையும் தரவல்லதாகும். இவ்வகையான ஊக்கத்தைத் தூண்டுவதன் மூலம் மாணவர்களைக் கற்றல் செயல்களில் ஈடுபடுத்திப் பயன்பெறச் செய்ய இயலும்.

2. புற ஊக்கம்

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

உள்ளார்ந்த ஆர்வமின்றி ஒரு புறத்தூண்டலால் உந்தப்பட்டு கற்றல் மேற்கொள்ளப்படுமாயின் அது புற ஊக்கத்தால் நிகழும் கற்றல் எனப்படும். மாணவர்களுக்குக் கற்றலில் மகிழ்ச்சி இல்லாதபொழுது அடைவு மேம்பாடு இராது. மாணவர்கள் சொந்த விருப்பத்திலோ, ஆர்வத்திலோ கற்றலில் ஈடுபடாமல் தேர்ச்சி பெற வேண்டும் என்பதற்காகவும், மற்றவர்களின் மதிப்பைப் பெறவேண்டும் என்பதற்காகவும் கற்றலில் ஈடுபடக்கூடும். பதவி உயர்வு பெறுவதற்காகவும், சமூக கௌரவத்திற்காகவும் மற்றவர்களின்

நன்மதிப்பு, புகழ், பாராட்டு பெறுவதற்காகவும், தண்டனைக்கு அஞ்சியும் கற்றலில் ஈடுபடுதல் போன்றவை புறத்திருந்து ஊக்குவித்தலுக்கு உதாரணங்களாகும். புற ஊக்கம், அக ஊக்கம் இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, அக ஊக்கமே உள்ளார்ந்த வேட்கைக்கும் (Inspiration) தொடர் செயலூக்கத்திற்கும் காரணமாக அமைகிறது;

## அக ஊக்கத்தைப் பேணுதல்

அக ஊக்கத்தை உரிய செயல்களினால் வடிகாலாக்க வேண்டும்; அதனை இனங்கண்டு வாய்ப்புகளை வழங்கி செய்து மகிழ்ந்து பயன்பெற வழிகாட்ட வேண்டும். கற்றல் செயல்பாட்டில் ஈடுபடும்பொழுது, தன் சொந்த விருப்பத்திற்காகவும், மகிழ்வதற்காகவும் உள்ளத்தின் ஆழ்ந்த நினைவிலிருந்து வெளிவரச் செய்வதற்காகவும் ஊக்கம் உதவுகிறது.

கல்விச் செயல்பாடுகள் அனைத்திற்கும் அக ஊக்கத்தையே நாம் சார்ந்திருக்க முடியாது. அப்பொழுது ஆசிரியர்கள் புறத்தூண்டலால் ஏற்படும் ஊக்குவித்தலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப்படும் ஊக்குவித்தல் பலவகையான ஆற்றல் அனுகூலங்களைத் தரும். அக ஊக்கத்தைப் பேதி வளர்க்க, வகுப்பறைச் சூழல் மிக அவசியமானது. மாணவர்கள் தங்கள் ஆசிரியர், தன் மேல் அக்கறை கொண்டவர் என்றும், தங்கள் வகுப்பறை தங்களுக்கு வாய்ப்பு தரும் இடம் என்றும் மாணவர் ஒவ்வொருவரையும் மதிப்போடும் மரியாதையோடும் வழி நடத்தும் இடம் என்றும் மாணவர்கள் நம்புமாறு ஆசிரியர் நடந்து கொள்ள வேண்டும். தம்மால் இயலும் என வகுப்பறை குழந்தைகள் சூழல் அமைய வேண்டும். சுய மரியாதையும், தன்னம்பிக்கையும் செயலார்வமும் கொண்டவர்களாக அவர்களை நடத்த வேண்டும். அவ்வாறு செய்வதால் மாணவர்கள் முழுவதுமாகக் ஆர்வத்துடன் கற்றலில் பங்குபெற முனைவார்கள்.

### 8.2. ஊக்குவித்தலைப் பேதி வளர்க்கும் சில காரணிகள்:

1. பள்ளி இலக்குகள் - பல்வேறு ஊக்கச் செயல் வெளிப்பாட்டு வாய்ப்புக்களைமாணவர்க்கு கற்றலின் மேம்பாடு, பாடத்தில் தேர்ச்சித் திறன், வழங்குவதாய் அமைய வேண்டும். மாணவர்களை இலட்சிய வேட்கை கொண்டவர்களாக ஆக்க வேண்டும். மாணவர்களின்

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

சுயவெளிபாட்டுக்கு ஆவன செய்வனவாய் பள்ளியின் தொலைநோக்கும், வழிகாட்டலும் அமைதல் அவசியம்.

2. வகுப்பறை இலக்குகள் - கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள், மாணவர் அடைவு நிலை, அடையும் நோக்கம், குறிக்கோள், மதிப்பீடு, பின்தங்குவோர், குழுச்செயல்கள் தனிக்கற்றல் முதலியன பற்றிய இலக்குகள் வகுப்புவாரியாக இருத்தல் அவசியம்.

3. திறன்களை மேம்படுத்துவதாக அமையும் செயல்பாடுகள் - கற்பித்தலுக்கான பாடப்பொருள் சூழ்நிலையோடு பொருத்தப்பாடுடையதாக மாணவனுடைய அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

4. வயது, காலம் மற்றும் பாடம் இவை பொருத்தமுடையனவாக இருப்பது ஏற்கும் பதி சாதனையைப் படைக்கக் கூடியதாகவும், அதே சமயத்தில் வெற்றி, அடையக்கூடிய ஒன்றாகவும் இருத்தல் வேண்டும். இவையனைத்துச் செயல்களும் கற்றலுக்கான அக ஊக்கத்தைப் பேதி வளர்ப்பனவாகும்.

# வெற்றியைப் பற்றிய நம்பிக்கை

வெற்றியைப் பற்றிய நம்பிக்கை நம்மைக் கிளர்ந்தெழச் செய்யும். தோல்வி மனப்பான்மை நம் செயல் வேகத்தை மட்டுப்படுத்தும். தோல்வி நேருமோ என்ற அச்சம், வெற்றி கிடைக்காதோ என்ற தளர்வு மாணவர்களைக் கற்றல் கற்பித்தல் சூழ்நிலையிலிருந்து ஆர்வங்குன்றச் செய்து விலகச் செய்றது. எனவே வழங்கப்படும் பாடப்பகுதி எடுத்த எடுப்பில், கற்றலில் தோல்வியை ஏற்படுத்தாதவாறு எளிமையிலிருந்து கடினத்திற்குச் செல்லுமாறு வகுத்தளிக்கப்பட வேண்டும்.

# கவலையைக் குறைத்தல்

மாணவர்களின் தேவையையோ, அல்லது கற்றலின் நோக்கங்களையோ உணர்த்தி குறிப்பிட்ட கற்றல் கற்பித்தல் நிகழ்வில் மாணவர்களை ஈடுபடுத்தும்பொழுது, மாணவர்கள் எதிர்பார்த்த அளவிற்கு நிறைவேற்ற முடியாமல் கவலையால் வருந்துகிறார்கள். இந்தக் கவலையானது கற்றல் கற்பித்தல் நிகழ்வில் கற்றலைத் துவக்கி வைப்பதோடு அல்லாமல் தொடர்ந்து கற்க வேண்டும் என்று நினைவூட்டிக் கொண்டும், கட்டாயமாகக் கற்றலில் ஈடுபட ஊக்குவித்துக் கொண்டே இருக்கிறது. இவ்வாறு தொடர்ந்து கடுமையான கவலையில் ஆழும்பொழுது கற்றலைப் பற்றி வெறுப்பூட்டிக் கற்றலைத் தகுதியற்ற செயலாக்குகிறது. மிதமான கவலை மாணவர்களைக் கற்றலில் ஈடுபட ஊக்குவிக்கும்.


© அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

மாணவர்களுக்கு மிகையான கவலை கற்றலில் இருக்கக் கூடாது. மிகையான கவலை கற்றலில் உள்ள ஊக்கத்தைக் குறைக்கும். இன்னும் சரியாகச் சொல்லுமிடத்தில் கற்பவரின் கற்றலிலும் நடத்தையிலும் அதிகவலை எதிர்மறையான செயல் விளைவுகளை உண்டு பண்ணுகிறது. மிகையான கவலையில் ஆழ்த்தும் நேரங்களில், மாணவர்கள் கற்றல் செயல்பாடுகளில் உள்ள கட்டுப்பாட்டை, ஆற்றலை இழக்கிறார்கள். அவ்வாறு இழப்பதால் தங்களுடைய கற்றல் இலக்குகளையே விட்டுவிடுகிறார்கள். ஓர் ஆசிரியர், மாணவரின் கவலையைக் குறைக்க வேண்டுமெனில், 'கற்றல் ஒரு சுமை' என்றாக்காமல் 'கற்றல் சுகமானது' என்று ஊக்குவித்து, கற்றலில் நாட்டத்தை அதிகரிக்க வேண்டும். கவலையில்லாமல் கற்றல் நடைபெற வேண்டுமெனில், ஏற்கனவே விவரித்ததைப்போல் மாணவர்களின் நிலைக்கேற்ற கற்றல் பொருள்களையும், கருத்துகளையும் கற்றல் முறைகளையும் தெரிவுசெய்ய வேண்டும். அவ்வாறு செய்து மாணவர்களின் கவலையைக் குறைத்துக் கற்றலைச் சுகமாக்க வேண்டும்.

# குழந்தைகளை அங்கீகரித்தல்

குழந்தைகளை இனங்கண்டு புகழ்தல், அங்கீகரித்தல், ஏற்றல், சேர்த்தல் என்பவை வல்லமை வாய்ந்த ஊக்கிகளாகும். எனவே 'குழுக்கற்றல்' அல்லது 'பிறருடன் கூடிக் கற்றல்' என்பது 'தனிக்கற்றல்' அல்லது தனித்துக் கற்றலைவிட மேன்மையானது எனலாம். ஒரு மாணவனுக்குத் தன்னைக் குழுவில் அல்லது வகுப்பில் சேர்த்துக் கொள்வது என்பது கற்றல் மேம்பட மிகவும் அவசியமாகிறது. முக்கியமாக மற்றவர்களுடன் தன் திறமைகளை ஒப்பிட்டு நோக்க, தன்னுடைய எண்ணம், கருத்துகளை, மனவெழுச்சிகளைப் பகிர்ந்து கொள்ள குழுவில் சேர்த்தல் என்பது தேவைப்படுகிறது.

கற்றல் நடத்தைகளான கருத்து வேறுபாடு, நம்பிக்கைகள், அறிவு, திறன் போன்றவற்றில் தான் எவ்வாறு வேறுபடுகிறோம், ஒன்றுபடுகிறோம், மேன்மை அடைகிறோம் என்றறியத் தேவைப்படுகிறது. எனவே ஆசிரியர் கற்றல் கற்பித்தல் நிகழ்வில் தம்முடைய மாணவர்களுக்குத் தமக்கேயுரிய வழியில் பொருத்தமான ஊக்குவித்தலை அளிப்பதற்காக ஆற்றல் வாய்ந்த, ஊக்கம் மிக்க, குழு நடத்தைக் கொள்கைகள்மீது கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு குழு நடத்தைக் கொள்கைகளைப் பின்பற்றும் பொழுது மாணவர்கள் தாங்கள் அங்கீகரிக்கப்பட்டதாகவும், ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் உணர்வார்கள். இவ்வுணர்வு கற்றலை மேம்படுத்தும்.

# நல்லுறவு பேணுதல்

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

ஆசிரியர் மாணவர்களிடையே உள்ள உறவு நல்லுறவாக அமைய வேண்டும். கற்றல் கற்பித்தல் நிகழ்வில் ஊக்குவித்தல் செயலை ஆரம்பித்து, தொடர்ச்சியாகப் பயன்படுத்தி, பராமரித்துக் கற்றல் கற்பித்தல் நிகழ்வைக் கொண்டு செல்லுதல் வேண்டும். ஆசிரியருக்கும், மாணவருக்கும் இடையே நடைமுறையிலுள்ளதான, அன்பான கனிவான உறவு முறையைப் பொறுத்துத்தான் வெற்றி அமையும். மேம்பட்ட உறவு முறை, மாணவர்களிடத்தில் மேம்பட்ட ஊக்குவித்தலை உருவாக்கும். இவ்வகையான உறவுமுறை இல்லாமல் போனால், மாணவர்களைக் கவர்ந்திழுக்காமல் போகும். வகுப்பறைச் செயல்பாடுகளில் ஈடுபாடு கொள்ள வேண்டிய நிகழ்வுகளில் எதிர்மறையான விளைவுகளையும் அது ஏற்படுத்தும். எனவே ஒவ்வொரு ஆசிரியரும் மாணவர்களிடத்து நல்ல இசைவுள்ள நேர்மறையான உறவு முறையைப் பேண வேண்டும். நல்லுறவு மேம்பட ஆசிரியர்களின் பதிஅறமும், நாட்டமும், பதிக்கேற்ற சிறந்த ஆசிரிய மனப்பான்மைகளும் அவசியம்.

# ஆரோக்கியமான போட்டி மனப்பான்மை

வகுப்பறைக்கு உள்ளும் புறமும் போட்டி மனப்பான்மை என்பது அனுகூலமான ஆற்றல் வாய்ந்த ஊக்குவித்தலாகும். இப்போட்டி மனப்பான்மையானது, அடைய வேண்டிய இலக்கை சீக்கிரத்தில் அடைய ஊக்குவிப்பதோடல்லாமல், செய்யும் செயலிலும் எதிர்பார்த்த நிறைவைவிட மேன்மையான நிறைவேற்றத்தை அளிக்கும். போட்டியை இரண்டு வகையாகக் கொள்ளலாம். ஒன்று தனியாள் போட்டி, மற்றொன்று குழுப்போட்டி. குழுப்போட்டியைவிட தனியாள் போட்டியானது, போட்டியாளருக்கு நல்ல பலனை அளிக்கக் கூடியது.

கற்றல் சூழ்நிலையில் போட்டி ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். ஆரோக்கியமான போட்டியைக் கொள்ளும்பொழுது விளைவு விரும்பத்தக்கதாக இருக்கும். அதே நேரத்தில் போட்டி மனப்பான்மையை அதிகமாக, ஆழமானதாகக் கொள்ளும்பொழுது இதில் உண்டாகும் விளைவானது எதிர்மறையானதாக அமையும். அதாவது செறுக்கு, இறுமாப்பு, 'நான்' என்னும் முனைப்பு (ego) போன்ற உணர்வுகள் மேலோங்கும். மனவெழுச்சிகளான பொறாமை, வெறுப்பு, போன்றவை தோன்றுமிடமாக அமையும். இவையனைத்தும் கற்றலில் இடையூறை விளைவிக்கும். ஆரோக்கியமான போட்டியானது கற்றல் நிகழ்வைத் தூண்டும் என்பதில் ஐயமில்லை.

# ஆர்வத்தை எழுச்சியுறச் செய்ய்ய்ய்த்து, காத்தல்

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

மனித வாழ்வில் எவ்வகையான செயல்பாட்டுக்கும் ஆர்வம் என்பது ஒரு மந்திரச் சொல்லாகும். 'ஆர்வம்' என்பது மாணவனுக்குள் ஒரு கருத்துபற்றி நாட்டம் ஏற்படுத்தும் காரணியாகும். மாணவனுடைய கற்றல் சூழலில் கற்கும் கருத்து, ஆசிரியரின் கற்பித்தல் முறை, கருத்துக்கான பொருட்கள், செயல்பாடுகள் இவற்றின் மீதான நாட்டம் கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்தும். அவ்வாறு நாட்டத்தை உண்டாக்க ஆசிரியர் கற்றல் பொருட்கள், கற்பித்தல் முறை செயல்பாடுகள் போன்றவற்றை மாணவர்களை ஈர்க்கும் வண்ணம் அமைத்து, அவர்களின் ஆர்வம் குறையாமல் கற்றல் அனுபவங்களில் ஈடுபடுத்த வேண்டும். கற்றல் கற்பித்தலானது புத்தகத்தில் உள்ளதை மட்டுமே சார்ந்திருத்தல் கூடாது. பாட்டு, கதை, நடிப்பு, வரைதல், வாசித்தல் எனப் பல செயல்களும் சேர்ந்து இருக்க வேண்டும். ஒரு மாணவர் கற்றல் செயல்பாட்டில் ஊக்குவிக்கப்பட்டு, அதில் ஆழ்ந்து ஈடுபடுவாராயின் அது எழுச்சியுற்ற ஆர்வம் மற்றும் தொடர்ந்து இருக்கும் ஆர்வத்தின் அளவைச் சார்ந்தே அமைகிறது. எனவே கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் எந்த அளவிற்கு ஆர்வத்தை உண்டாக்க முடியுமோ அந்த அளவிற்கு உண்டாக்க மாணவர்களை ஊக்குவித்தல் வேண்டும்.

# கவனம் )Attention)

கவனம் என்பது ஒரு பொருளின்மீது, அல்லது ஒரு பேச்சின்மீது, அல்லது ஒரு செயலின்மீது அறிவுசார்ந்த ஆற்றலை ஒருமுகப்படுத்துவதே ஆகும். மனக் குவிவு எதன்பால் ஏற்படுகிறதோ, அது நமது கவனத்தில் இடம்பெறுகிறது. மனக் குவிவால் நிலைபெறும் கவனம், ஆழ்ந்த ஞாபகத்தில் நிற்கும்; எளிதில் மறவாது.

மனக் குவிவைக் கவன ஈர்ப்புச் சக்திகள் திரட்டுகின்றன. கவன ஈர்ப்புச் சக்திகளை ஆசிரியர்கள் நன்கு சோதித்துத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். கற்றல் கற்பித்தல் பொருள்களின் வண்ணம், வடிவம், புதுமை, மினுக்கு, நயம், கலை, வகை முதலியன குழந்தைகளின் கவனத்தை எளிதில் ஈர்க்க வல்லன. மாணவர்கள் கற்றல் கற்பித்தல் பொருள்களைத் தம் கையில் வாங்கி, மடியில் வைத்துத் தொட்டுப் புரட்டிச் சூழக் கவனிக்கையில் கவனம் அதன்பால் உய்க்கப்படுகிறது. இவ்வாறு குழந்தைகளின் கவனத்தைத் தொடர்ந்து ஒரு பொருளின்பால் ஈர்த்துவைத்துக் கொள்ளக் கூடிய நிகழ்வே

ஆசிரியர் வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயல்களில் ஈடுபட்டிருக்கும்பொழுது, தம்முடைய குரலில் ஏற்றத் தாழ்வுகளைப் பயன்படுத்துகிறார். கரும்பலகையில் எழுதுதல், வரைதல் போன்ற செயல்களை மேற்கொள்கிறார். அட்டையிலுள்ள படங்களைக் காட்டி விளக்குகிறார். அவ்வாறு ஒரு கற்றல் கற்பித்தல் நிகழ்வில் பலவகையான செயல்களை,

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

மாற்றங்களை உருவாக்குவது ஏன்? தொடர்ந்து பல்திறப்பட்ட ஆர்வங்களையூட்டி கவனத்தை நீட்டித்து வைத்திருப்பதற்காகவே அவ்வாறு செய்கிறார்.

# கற்றலை மேம்படுத்தும் முறைகள்

பண்டைய கல்வி முறையில், நெடுங்காலந்தொட்டு ஆசிரியர்கள் பல்வேறு பாடங்களைக் கற்பிக்கப் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு வந்துள்ளனர். குருகுலக்கல்வி முறையில் குருவும் சீடர்களும் ஓரிடத்திலேயே கூடி வாழ்ந்தனர். அங்கு அறிவுடன் நல்வாழ்க்கைக்குரிய நெறிகளும் புகட்டப்பட்டன. இயற்கையுடன் இயைந்து வாழ்ந்த காலம் அது. உற்றுநோக்குதல் மூலமே மாணவர்கள் நன்கு கற்றனர். அச்சு இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்படுவதற்குமுன் ஆசிரியர்கள் வாய்மொழி மூலம்தான் கற்பித்தனர். இன்றைய நிலையில் பள்ளிச்சூழல் வெகுவாக மாறிவிட்டது. தகவல் தொழில்நுட்பம் பெருகி வளர்ந்துள்ளது. இக்காலத்தில், ஆசிரியர் பல்வேறு பொருத்தமான சாதனங்களை உரிய முறையில் கற்பித்தல் நெறிக்குப் பயன்படுத்துவது மிகவும் ஏற்றதாகும்.

இந்த அலகில் பல்வேறு கற்பித்தல் முறைகளைப் பற்றி ஆராய இருக்கிறோம். மிக அவசியமானதொரு கருத்தை மட்டும் ஒவ்வொரு ஆசிரியரும் மனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு கருத்தைக் கற்றுத்தர ஒரே ஒரு முறைதான் உள்ளது என எண்ணுவது தவறு.

கற்பித்தல் முறையைத் தேர்ந்தெடுக்க பின்வருபவை மிக முக்கிய காரணிகளாக அமைகின்றன.

- மாணவர் நிலை
- பாடத்தின் தன்மை
- தலைப்பின் இயல்பு
- ஆசிரியரின் கற்பனைத் திறன்
- நடைமுறைப்படுத்துதல்
- நேர அளவு

மேற்கண்ட காரணிகளைப் பொருத்துப் பாடப்பொருள் தலைப்பிற்கேற்பக் கற்பித்தல் முறைகளைத் தேர்ந்தெடுப்பது ஆசிரியரின் பொறுப்பே ஆகும். ஒரு குறிப்பிட்ட


© அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

தலைப்பிற்குப் பல் வேறு கற்பித்தல் முறைகளைக் கையாளலாம். அதேபோல ஒரு குறிப்பிட்ட முறையில் பல பாடப் பொருள்களைக் கற்பிக்கலாம். ஆசிரியர்தான் இதை நிர்ணயிப்பவராகிறார். சில ஆசிரியர்கள், இம்முறைகளைக் கைவிட்டு நடைமுறைக்கு உதவாது எனச் சாதாரணமாக வாசித்து முடிக்கின்றனர். குறிப்பிட்ட காலத்திற்குள் பாடங்கள் முடிக்கப்பட வேண்டும்" எனக் காரணம் கூறி விவாதிப்பர். இதை ஒரு விவாதத்திற்காக நோக்குவோம். நாம் மேற்கொள்ளும் இவ்வளவு முயற்சியும் எதற்காக? மாணவரிடம் `கற்றல்' நடைபெற வேண்டும் என்பதுதானே அடிப்படைக் நோக்கம்? இந்த அலகில் சொல்லப்பட்டுள்ள முறைகளை `முறை'யாகப் பயன்படுத்தினால், கற்றல் எளிதாகும்; கற்பித்தல் இயல்பானதாகும்; கற்றலும் நடைபெறும்; அதன் பயனும் பன்னாட்கள் நிலைத்துப் பயனளிக்கும். கற்பித்தல் முறைகளை வகையுணர்ந்து, தொடர்ந்து ஆசிரியர் ஒருவர் பயன்படுத்தி வந்தாரெனின், அவற்றில் அவர் வல்லமை பெற்றவராவார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அன்றியும் அவரே தமது பட்டறிவால் புதிய முறைகளைப் புகுத்திக் கற்போரை மகிழ்வில் ஆழ்த்த முடியும்.

| முறை | Method | Use for us. |
|---|---|---|
| விளையாட்டு முறை | Whole book is based on this.<br>Letter and word game! | நமக்கு மிகவும் உகந்த முறை |
| தானே கற்றல் | | பெரும்பாலான பயிற்சிப்புத்தகப் பாடங்கள் இந்த முறைப்படி அமைக்கப்பட்டுள்ளன. |
| கணினி வழிக்கற்றல் | For multimedia contents | சில சமயங்களில் மட்டும். |
| கலந்துரையாடல் | | அனைத்து வகுப்புகளிலும். |
| வாழ்க்கை வரலாற்று முறை | வரலாற்றுச் நிகழ்வுகளைச் சொல்லி கற்கும் முறை | நமக்கு வெகு சில சமயங்களில் மட்டுமே தேவைப்படும். எ கா: கதை சொல்லும்பொழுது |
| செயல்திட்ட, விளக்க முறை | Project based learning | வெகு சில சமயங்களில் மட்டுமே தேவைப்படும். எ கா: Summar School projects. Science etc. |
| கண்டறி முறை | Science and Math learning | We do not use this |

# விளையாட்டு முறை

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

எப்பருவத்தினரும் வயதுக்கேற்ற விளையாட்டுக்களை விரும்பவே செய்கின்றனர் அதிலும் குழந்தைப் பருவம் விளையாட்டை மிக விரும்பும் பருவம். மனிதன் குழந்தைப் பருவத்தில் விளையாட்டில் பெரிதும் ஈடுபடுகிறான். ஆதலால் விளையாட்டு குழந்தைகளின் இயல்பாகக் காணப்படுகிறது. விளையாட்டு குழந்தைகளின் இயல்பான தேவைகளின் வெளிப்பாடு என்பதில் ஐயமில்லை. இவ்விளையாட்டின் மூலம் குழந்தையின் உடல், உள்ள வளர்ச்சி சமூக மாற்றத்தை உள்ள வளர்ச்சி உணர்ந்து செயலாற்றுதல், ஆகியன பேரளவில் வளர்ச்சியும் வலிமை பெறுகின்றன.

### 8.3. வேலைக்கும் விளையாட்டிற்குமுள்ள வேறுபாடு

விளையாட்டும் வேலையும் இருவேறு செயல்கள். ஒருவருக்கு வேலையாக இருப்பது மற்றொருவருக்கு விளையாட்டாக இருக்கக்கூடும். தோட்டம் பராமரித்தல் தோட்டக்காரனுடைய வாழ்வுக்குப் பதியாக இருக்கிற காரணத்தால் வேலையாகிறது. அத்தோட்ட வேலையே ஒரு குடும்பத் தலைவியின் மனஅழுத்தத்தைக் குறைக்க உதவும் மாற்றாக அமைவதால், பொழுதுபோக்காகிறது. ஆனால், இவ்விரு செயல்களும் அடிப்படையில் ஒன்றுதான்.

### 8.4. விளையாட்டு முறையின் கொள்கைகள்

1. விளையாட்டு முறை, செயல்வழிக் கற்றலின் அடிப்படையானது; சுய வெளிப்பாட்டையும் ஆக்கத்திறனையும் தூண்டக்கூடியது.
2. இம்முறை வாழ்க்கையோடு இயைந்ததாக இருப்பதால், குழந்தைகள் பள்ளியை <u>மாற்று இல்லமாகக்</u> கருத முடிகிறது.
3. குழந்தைகளின் தேவையையும் நிறைவேற்றி அதிகரிக்கக் கூடியது.
4. ஆசிரியருக்கும் குழந்தைகளுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கிறது. கற்றலுக்கு ஏற்ற சூழலை உருவாக்குகிறது.
5. இம்முறையில் கற்பது நீடித்த நினைவாற்றலுக்கு உதவுகிறது.
6. அனைத்துக் குழந்தைகளும் பங்கு கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

**எனவே ஆசிரியர், ஆயத்த நிலையிலேயே, ஒவ்வொரு குழந்தையின் தேவையையும் மனதில் கொண்டு திட்டமிட்டு ஏற்பாட்டுடன் செயல்படுதல் அவசியம்.**

### 8.5. விளையாட்டு முறையின் நிறைகள்

1. விளையாடுவது குழந்தையின் இயல்பு. எனவே, மனமுவந்து குழந்தை அதில் ஈடுபடுகிறது.அதனால் மகிழ்வும் திருப்தியும் அடைகிறது. அதன் வழியே ஆதலால் கற்றல் என்பது இயல்பாக நிகழ்கிறது.
2. இம்முறையில் குழந்தையின் முழுப் பங்கேற்புக்கு வாய்ப்பு கிடைக்கிறது.

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

3. அறிவுத் திறன்களின் வளர்ச்சியோடு மட்டுமன்றிக் குழந்தைகளின் உள் உணர்வுகளுக்கும் திருப்தியளிக்கிறது.
4. வற்புறுத்தலின்றிய சுயக் கட்டுப்பாட்டிற்கு வழி கோலுகிறது.
5. குழந்தைகளின் புலன் வழிக் கற்றலுக்கும் புலப் பயிற்சிக்கும் இம்முறை அதிக வாய்ப்பை நல்குகிறது.

### 8.6. விளையாட்டு முறையின் குறைகள்

1. இம்முறை தொடக்கக் கல்வி மாணவர்களுக்கு ஏற்ற ஒன்றாகும். பெரும்பாலும் ஆரம்ப நிலைக் கல்விக்கு மிக உகந்தது.
2. சில குழந்தைகள் கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் தராமல், விளையாட்டாகவே இருக்கவும் வாய்ப்புகள் உண்டு.

### 8.7. விளையாட்டு முறையில் ஆசிரியர் பங்கு

1. விளையாட்டின் வழியான புதிய கற்றல் செயல்களையும் சூழலையும் உருவாக்க ஆசிரியர் கற்பனைத்திறன் உடையவராக இருத்தல் வேண்டும்.
2. குழந்தைகள் கற்றலை இனிமையான அனுபவமாக எண்ணுமளவுக்குக் கற்றல் சூழல் குதூகலமாக அமைய செய்தல் வேண்டும்.
3. கற்றல் செயல்களைத் வடிவமைத்த பிறகு அவற்றிற்கேற்ற கற்றல் துணைக் கருவிகளைத் முன்னதாகவே தயாரித்தல் வேண்டும்.
4. எளிமையானவற்றிலிருந்து படிப்படியாகக் கடினம் போல் தோன்றுவனவற்றை நோக்கிச் செல்வனவாகக் கற்றல் செயல்கள் அமைதல் வேண்டும்.
5. கற்றலை நடைமுறைப்படுத்தும்போது ஆசிரியர், வழிகாட்டியாகவும் மேற்பார்வையாளராகவும் தலைவராகவும் இருத்தல் நன்று.
6. விளையாட்டு முறைக் கற்றலாக இருப்பினும், மதிப்பீட்டை மறத்தல் கூடாது. அதனையும் விளையாட்டுச் செயல்கள் வாயிலாகவே நிறைவேற்ற முயலல் வேண்டும்.

விளையாட்டு முறையின் அடிப்படையில்தான் மாண்டிச்சோரி, கிண்டர்கார்டன் ஆகிய கற்பித்தல் முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் விளையாடுதல் தான் முக்கியச் செயலாகும். இம்முறை குழந்தைகளுக்குப் புத்துணர்ச்சி தருவதாக அமைந்துள்ளது. அவர்களின் கற்றலை மேம்படுத்துகிறது. எனவே இம்முறையின் நல்ல அம்சங்களை மேல்வகுப்பு மாணவர்கட்கும் பயன்படுத்துதல் திறமையான ஆசிரியர்களின் கடமையாகும்.

# தானே கற்றல்

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

தனி மாணவராகவோ, பிறருடன் இணைந்தோ ஆர்வத்துடன் தாங்களே ஆய்ந்து, அறிந்து, உணர்ந்து, கற்பதும், மதிப்பிடுவதும் தானே கற்றல் எனப்படுகிறது. கவனித்தல், உற்றுநோக்கல், எழுதுதல், வரைதல், வினவுதல், புரிதல், தொகுத்தல் போன்றவை சுயமாகக் கற்க ஏற்ற உத்திகளாகும். தன் இயலுமைகளுக்கு உகந்த விரைவில், காலவிரயமின்றி முயன்று கற்க வாய்ப்பாக உள்ளது. தானே கற்றலுக்கு வழிவகுக்கும் கற்றல் பொருட்களின் தன்மை பின்வருமாறு;

1. கையாளுவதற்கு எளிதாக அலகு அலகாக இருக்க வேண்டும்.
2. குழந்தைகளைக் கவரும் வண்ணம் அழகாக அமைய வேண்டும்.
3. ஒவ்வொரு பொருளும் ஒரு கருத்துருவை மையமாகக் கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும்.
4. மாணவர்கள் தாமே குறைகளைக் களைந்து கொள்ளும் வகையில் அமைந்திருக்க வேண்டும்.
5. மேலும் அதிகமாகத் தேடுதலைத் தூண்டுவதாக இருத்தல் வேண்டும்.
6. பயன்படுத்திய பின்பு மாணவர்கள் தாங்களாகவே பிற புதிய கற்றல் பொருள்களைக் கண்டறிய உதவுவதாக அமைய வேண்டும்.

### 8.8. தானே கற்றலில் ஆசிரியரின் பங்கு

மாணவர்களுக்குத் தானே கற்றலுக்கு வடிவமைக்கப்பட்டுள்ள படிநிலைகளைப் பற்றிய முன்அறிவு இருப்பதை ஆசிரியர் உறுதி செய்துகொள்ள வேண்டும். மாணவர்கள் ஆர்வத்துடன் செயல்களில் ஈடுபடும் வகையில் தானே கற்றல் பொருள்களை வடிவமைக்க வேண்டும். தானே கற்றலுக்குத் தரப்படுகின்ற விளக்கங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் எளிதாக அமைய வேண்டும். தானே கற்றலுக்கான படிநிலைகள் தனித்தனியாகவும் தொடர்ச்சியாகவும் முறைப்படுத்தப்பட்டும் இருக்க வேண்டும். ஒவ்வொரு பகுதியும் தனித்தனியாகக் கண்டறியும்படி அமைய வேண்டும்.

### 8.9. தானே கற்றலின் பயன்கள்

1. குழந்தைகள் அவரவர் திறமைக்கேற்ப, தமக்கேற்ற வேகத்தில் கற்க முடியும்
2. ஒவ்வொரு கற்றல் செயல்பாட்டிலும் குழந்தை ஈடுபட்டுள்ளதை உறுதி செய்ய முடியும்.
3. நினைவாற்றல் மேலோங்கும்.
4. மாணவர்கள் செயல்களில் முழுமையாக ஈடுபட முடிகிறது.
5. மாணவர்களிடையே ஊக்கம் உண்டாகிறது.
6. மேலும் இது தொடர் கற்றலுக்கு வழிவகுக்கிறது.

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

# கணினி வழிக்கற்றல்

### 8.10. கணினி வழிக் கற்றலின் பயன்கள்

1. மாணவர்கள் தாங்கள் விரும்பிய நேரத்தில் தாங்களாகவே தங்களுடைய வேகத்தில் கற்க இயலும். இதனால் தனியொரு மாணவரின் தேவைகளுக்கேற்பக் கல்வி வழங்க முடிகின்றது.
2. மாணவர்களின் செயல்பாடுகளின் மதிப்பீட்டினைக் கணினியே சேமித்து வைத்துக் கொள்வதால், தொடர் மதிப்பீடு செய்ய இயலும்.
3. ஒவ்வொரு கருத்தினையும் கற்றபின் அதுபற்றிய பல வினாக்களுக்குக் கணினியில் பதில் கொடுப்பதால் தொடர் மதிப்பீடு எளிமையாகிறது.
4. வண்ண, வண்ணப் படங்கள், எழுத்துகள், நிழற்படங்கள், நகர்படங்கள், ஒலி-ஒளி நிகழ்ச்சி போன்றவற்றைப் பார்த்துக் கற்றுக் கொள்வதால் அவர்களிடம் கற்கும் ஆர்வம் அதிகமாகக் காணப்படும்.

### 8.11. கணினி வழிக் கற்றலின் முக்கியத்துவம்

1. கதிப்பொறியில் செய்திகள் விரைவாகவும் துல்லியமாகவும் கிடைக்கின்றன.
2. கற்போருக்குச் செய்திகள் உடனடியாகவும் நேரிடையாகவும் கிடைக்கின்றன.
3. கற்பவரிடமிருந்து பல்வேறு வகையான பதில்களையும் கணினி ஏற்றுக் கொள்கிறது.
4. கற்பிக்க வேண்டிய செய்திகளைப் பாடப்பொருள் வடிவிலும், வரைபட முறையிலும், உயிரோட்டச் செயல்கள் வடிவிலும் தருகின்றது.
5. கற்பவரின் கற்கும் வேகத்தைப் பொறுத்து, அவர் அடுத்துக் கற்க வேண்டிய பாடக் கருத்தைத் தீர்மானிக்கிறது.

# கலந்துரையாடல்

மாணவர் ஓரிடத்தில் கூடி, ஒரு கற்றல் நோக்கத்தை அடைவதற்காகப் பேச்சு, கேட்டல், செய்கை ஆகியவற்றால் முயன்று தொடர்பு கொள்வது கலந்துரையாடல் எனப்படும்.

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

### 8.12. கலந்துரையாடலில் ஆசிரியரின் பங்கு

மாணவர்களின் கலந்துரையாடலை நெறிப்படுத்துபவராக ஆசிரியர் இருப்பார். கலந்துரையாடுவதற்குரிய தலைப்பை ஆசிரியர் தேர்ந்தெடுத்து வழங்குவார். பொதுவாக, தலைப்பு ஒரு சிறந்த வகைக் கேள்வியாகவே அமையும். என்ன? ஏன்? எப்படி? என்று கேட்பதாகக் கேள்வி அமையும். என்ன செய்ய வேண்டும் ? என்பதை மாணவர்கள் விடையாகத் தருவர், அவை கலந்துரையாடலில் விவாதிக்கப்படும். கலந்துரையாடலின் தலைவராக ஆசிரியர் இருப்பார். கேள்விகளைத் தெளிவாகத் தேர்ந்தெடுப்பது, தொடர்புள்ள கருத்துகளை மாணவர்கள் ஒருங்கிணைத்துக் கலந்துரையாடலுக்கு உதவுவது, மாணவர்களின் கருத்துகளை ஏற்றுக் கொள்வது, சிறந்த நடைமுறைக் கருத்துகளைத் தேர்ந்தெடுப்பது போன்றவை ஆசிரியரின் பதிகளாகும்.

### 8.13. கலந்துரையாடலை நடத்தும் முறை

கலந்துரையாடல் நடத்துவதற்கு ஆசிரியரும் மாணவரும் ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் குழுமிட வேண்டும். ஒவ்வொரு மாணவரும் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் எழுந்து, குழு உறுப்பினர் அனைவருடனும் பேசவோ, செய்கையால் வெளிப்படுத்தவோ வேண்டும். ஒவ்வொரு மாணவரும் எழுந்து குழுவிடம் தம் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு உரிமை பெற்றவராகிறார். கற்பித்தல் குறிக்கோளையொட்டிக் கலந்துரையாடல் அமையவில்லையெனில் அக்கலந்துரையாடல் வெறும் மேலோட்டமாக அவரவர் கருத்துகளைக் கூறும் நிகழ்ச்சியாக அமைந்து விடும். முழுவதுமான பொருள் அறிதல், மனப்பான்மை மாற்றம், ஒழுக்க வளர்ச்சி, புதிர்தீர்வு, செய்தி வெளிப்படுத்தும் திறன்கள் போன்ற கற்றல் நோக்கங்களை ஆசிரியர் நிறைவேற்ற எண்ணுகையில் கலந்துரையாடல் முறை ஏற்றதாக அமையும்.

# கற்கும் குழந்தை

### 8.14. குறியீட்டுச் சிந்தனை

சில சமயங்களில் நமது வீட்டில் குழந்தைகள் சிறிய காகித துண்டைக் கொடுத்து இது தான் பயணச்சீட்டு; வைத்துக் கொள்ளுங்கள், என்றும் வெறும் குவளையைக் கொடுத்து இது தான் தேனீர்; குடியுங்கள், என்றும் விளையாடுவதைப் பார்த்திருப்பீர்கள். இங்கு குழந்தை பயணச்சீட்டிற்கு காகிதத்தையும் தேனீருக்கு வெறும் குவளையையும் குறியீடு செய்கின்றது.குழந்தையின் இத்தகைய சிந்தனையைக் குறியீட்டுச் சிந்தனை என்கிறோம்.

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

குழந்தைகள் தாங்கள் புரிந்துகொண்ட வார்த்தைகள், எண்கள், உருவங்கள் போன்ற குறியீடுகளை உள்ளத்தில் உபயோகப்படுத்தும் திறனே குறியீட்டுச் சிந்தனை எனப்படும்.

### 8.15. குறியீட்டுச் சிந்தனையின் தன்மை

குழந்தைகள் இடைவெளி, காரண காரியம், அடையாளம் காணுதல், வகைபாடு செய்தல் மற்றும் எண்ணுருக்கள் இவற்றை புரிந்துகொள்வதன் மூலம் அவர்களின் குறியீட்டுச் சிந்தனை வளர்ச்சி அடைகிறது. குழந்தைகள் சிலவற்றை சிசு பருவத்திதிருந்தே புரிந்துகொள்ளத் தொடங்கி விடுகின்றனர். மற்றவை முன் குழந்தைப் பருவத்தில் வளர ஆரம்பிக்கின்றன.

குறியீடுகளை புரிந்துக்கொள்வது என்பது படிப்படியான வளர்ச்சி. சின்னஞ்சிறு குழந்தைகள் தொலைக்காட்சியை பார்த்துக்கொண்டிருந்தாலும் அவர்களுக்கு அவை நிம்பங்கள் என்று புரிவதில்லை. தொலைக்காட்சிப் பெட்டியைக் கவிழ்த்து வைத்தால் அதில் காண்பிக்கப்படும் குவளையில் உள்ள நீர் கீழே கொட்டிவிடுமா என்ற கேள்விற்கு மூன்று வயது குழந்தைகள் ஆம் என்று பதில் அளித்தனர்.

எனக்கு ஐஸ்கிரீம் வேண்டும் என்று வீட்டில் இருக்கும் நான்கு வயது குழந்தை கேட்கின்றது எனக் கொள்வோம். அந்த குழந்தை ஐஸ்கிரீம் ஆர்வத்தைத் தூண்டும் குளிர்சாதனப் பெட்டி திறப்பதையோ தொலைக்காட்சியில் வரும் விளம்பரத்தையோ எதையும் பார்க்கவில்லை. ஒரு பொருளைப்பற்றி பினைப்பதற்கு இவைபோன்ற குறிப்புகள் எதுவும் அந்த குழந்தைக்குத் தேவைப்படுவதில்லை. ஆனால் அக்குழந்தை ஐ௷கிரீம் அதன் குளிர்ச்சி, சுவை ஆகியவற்றை பினைவுக்குக் கொண்டு வந்து அதனைக் கேட்கின்றது.

குழந்தைகள் பள்ளிக்கு வரும் முன்னர் பின்பற்றிச் செய்தல், பாவனை விளையாட்டு, மொழியால் கருத்துப்பரிமாற்றம் ஆகிய செயல்களில் ஈடுபடுகின்றனர். இவையெல்லாம் குறியீட்டுச்சிந்தனையின் வெளிப்பாடுகளே ஆகும். பின்பற்றிச் செய்தலில் குழந்தைகள் தாங்கள் உற்றுநோக்கிய பிறரது செயல்களை மனத்தில் படம் பிடித்து வைத்துக்கொண்டு அதனை மீட்டுக்கொணர்ந்து செய்து காட்டுகின்றனர். பாவனை விளையாட்டில் குழந்தைகள் மருத்துவர் போல, பேருந்து ஓட்டுநர் போல தங்களை உருவகப்படுத்தி கொண்டு விளையாடுகின்றனர்.

குழந்தைகளின் குறியீட்டுச்சிந்தனைக்கு எண்ணுருக்களும் எழுத்துகளும் அவசியம். மொழியைப் பயன்படுத்தி குழந்தைகள் வார்த்தைகளைப் பேசுகின்றனர்; கேட்கின்றனர். அந்த வார்த்தைகளுக்கு பொருள் கொடுக்கும்போது அவை கருத்துப் பரிமாற்றத்துக்கு உதவுகின்றன. இவ்வாறு குழந்தைகள் பள்ளிக்கு வருமுன் குறியீட்டுச் சிந்தனையில்

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

தேர்ச்சி பெற்று விடுவதால் மழலை மற்றும் முதல் நிலைகளில் செயல் வழிக் கற்றல் முறையில் குழந்தைகளுக்குக் குறியீடுகளைப் பயன்படுத்திக் கற்றிக்கமுடிகின்றது.

### 8.16. தர்க்கமுறை சிந்தனை

குறியீட்டுச்சிந்தனையின் வளர்ச்சி தர்க்கமுறை சிந்தனையாகும். தர்க்கமுறைசிந்தனை என்பது குறியீடுகளில் வரிசைத் தொடரை ஏற்படுத்தி ஒரு முடிவையெடுத்தல் அல்லது மதிப்பீடுசெய்தல் ஆகும். ஒரு குழந்தை 7,8 ஆண்டுகளில் வரிசைத் தொடர்பு கிரமப்படி சிந்திக்கத் தொடங்குகிறது என்று நியாஜே குறிப்நிடுகின்றார். நியாஜே மற்றும் அவரது சகாக்கள் குழந்தைகள் தர்க்கச் சிந்தனை வளர்ச்சியை அனுமானம் செய்வதன் மூலம் ஆரம்பிக்கின்றனர் என்று கருதுகின்றனர். அனுமானம் செய்வது என்பது நின்வரும் தர்க்கச் சிந்தனை முறையாகும்.

A என்பவன் B -யை விட உயரமானவன்....1

மற்றும்

**B** என்பவன் C -யை விட உயரமானவன்.....2

என்றால்

A என்பவன் C -யை விட உயரமானவன்....3

என்று அனுமாவீக்கிறோம்

சிறு குழந்தைகள் 1 மற்றும் 2 கருத்துகளை தவீத்தவீயே புரிந்துகொள்ள முடிகின்றது. ஆனால் அவற்றை தர்க்க முறையில் சிந்தித்து ஒருங்கிணைக்க முடியவில்லை.

### 8.17. எண்ணியல் தர்க்கச் சிந்தனை

பள்ளிமுன் பருவத்தில் (3-6 ஆண்டுகள்) குழந்தைகள் எண்களைப்பற்றிய 5 விதிகளை ஓரளவு புரிந்துக்கொள்கின்றனர்.

1. ஒரு பொருளுக்கு ஓர் எண்ணைத் தொடர்பு படுத்துவது.
2. பிழையான எண்வரிசை 1,2,3,4,5 ......
3. எந்த பொருளிதிருந்து எண்ணத் தொடங்கினாலும் மொத்த எண்ணிக்கை சமம்.
4. பொருள்களின் மொத்த எண்ணிக்கை கடைசிப் பொருளின் எண்ணாகும்.
5. இந்த நான்கு விதிகளும் எந்தப் பொருளுக்கும் பொருந்தும்.

 © அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy

குழந்தைகள் முததில் இந்த விதிகளைப் புரிந்துகொண்டு அதன் அடிப்படையில் எண்ணத் தொடங்குகின்றனர் என்று முன்பு ஆராய்ச்சியாளர்களால் நம்பப்பட்டது. ஆனால் தற்போது குழந்தைகள் எண்ணக் கற்றுக்கொண்ட பின்னரே இந்த விதிகளைப் புரிந்துக்கொள்கின்றனர் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

ஐந்து வயதில் குழந்தைகள் இருபது மற்றும் அதற்கு மேலும் எண்ண முடிகின்றது. ஒன்று முதல் பத்து வரை எண்களின் அளவை அதாவது பெரியது, சிறியது எனத் தெரிந்துகொள்ள முடிகின்றது. ஆண்டுகளில் ஒரு மிட்டாய் வைத்திருந்த குழந்தைக்கு இன்னொன்று கொடுத்தால் தான் இப்போது அதிகம் வைத்திருக்கிறோம் என்று நினைக்கின்றது. அதில் ஒன்றை மற்றொரு குழந்தைக்குக் கொடுத்து விட்டால் இப்போது குறைந்துவிடுகின்றது என்றும் நினைக்கின்றது. 4,5 வயதுகளில் குழந்தைகள் 9 வரை பொருள்களை ஒப்பீடு செய்து பெரியது, சிறியது என கூறமுடியும். எண்வரிசை அறியும் திறமை எல்லா குழந்தைகளுக்கும் பொதுவானது ஆனால் அது குழந்தையின் குடும்பச் சூழ்நிலை, பெற்றோர் மற்றும் ஆசிரியர் தரும் பயிற்சிகள் (மழலையர் கல்வி), தொலைக்காட்சி ஆகியவற்றின் தாக்கத்தைப் பொறுத்து வளர்ச்சி அடைகின்றது.

பள்ளியில் பாடங்களைக் குழந்தைகள் தர்க்கமுறையில் சிந்தித்து கற்றுக்கொள்ளும்போது அவர்கள் தாங்களாகவே செயல்பட்டுக் கற்கின்றனர். அதனால் அவர்கள் எளிதாக கற்கமுடியும். அவ்வாறு கற்றப் பாடம் மனதில் நிலைத்து பிற்கும். எப்போது தேவையோ அப்போது அவர்களுக்கு அது பயன்படும். குழந்தைகளிடம் தர்க்கச் சிந்தனையை வளர்க்க விரும்பும் ஆசிரியர்களும் “அதுபோல”, “அதுமாதிரி” என்னும் சொற்களைத் தங்கள் வகுப்பறை கற்நித்ததில் பயன்படுத்த தேவையான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். பொருள்களை ஒப்பிடுதல், உவமைகள், புதிய பாடங்களை முன்னறிவோடு இணைத்தல் போன்ற சூழ்பிலைகளில் இச்சொற்களைப் பயன்படுத்த அதிக வாய்ப்புகள் உள்ளன. எடுத்துக்காட்டாக பால்விற்பவரைப் பால்காரர் என்கிறோம். அதுபோல மிட்டாய் விற்பவரை மிட்டாய்காரர் என்கிறோம்.

நன்றி : தமிழ் நாட்டுப் பாடநூல்கள்


© அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகம் © American Tamil Academy